தஞ்சாவூர் சரசுவதி மகால் வெளியீட்டு எண். 444

# வைத்திய சாத்திரம்

என்னும்

# அனுபவ வைத்திய முறைகள்

தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்

சரசுவதி மகால் நூலகம்,

தஞ்சாவூர்

தஞ்சாவூர் சரசுவதி மகால் வெளியீட்டு எண். 444

# வைத்திய சாத்திரம்

என்னும்

# அனுபவ வைத்திய முறைகள்

பதிப்பாசிரியர்:

புலவர். திருமதி **ச. திலகம்**, பி. லிட்.,
*தமிழ்ப் பண்டிதர்,*
*சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர்.*

**தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்**

**சரசுவதி மகால் நூலகம்,**

**தஞ்சாவூர்.**

2006

[ விலை : ரூ. 50-00

# நூற்பதிப்பு விளக்கக் குறிப்பு

| | |
|---|---|
| நூற்பெயர் | : வைத்திய சாத்திரம் என்னும் அனுபவ வைத்திய முறைகள் |
| பதிப்பாசிரியர் | : புலவர். ச. திலகம், பி. லிட்., |
| வெளியிடுபவர் | : இயக்குநர், சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர். |
| வெளியீட்டு எண். | : 444 |
| மொழி | : தமிழ் |
| பதிப்பு | : இரண்டாம் பதிப்பு |
| வெளியீட்டு நாள் | : ஆகஸ்ட், 2006 |
| தாள் | : TNPL 18.6 கி. கி |
| நூல் அளவு | : 21 x 14 செ. மீ. |
| பக்கங்கள் | : 100 |
| படிகள் | : 500 |
| எழுத்து | : 12 புள்ளி |
| அச்சிட்டோர் | : ஒளி அச்சுக்கோப்பு மற்றும் ஒளி அச்சு, சரசுவதி மகால் நூலகம். |
| புத்தகக்கட்டு | : மெலிந்த அட்டை |
| பொருள் | : சித்தமருத்துவம் |
| விலை | : ரூ. 50-00 |

# வெளியீட்டாளர் முகவுரை

தஞ்சையில் அமைந்து தரணி முழுமைக்கும் பயன்பட்டுக் கொண்டிருக்கும் அரும்பெரும் நிறுவனம் சரசுவதி மகால் நூலகமாகும். சுவடிக்கருவூலமாகவும் பன்மொழி நூற்களஞ்சியமாகவும் பன்மொழி ஆய்வு மையமாகவும் திகழும் சரசுவதி மகால் நூலகம் ஆற்றிவரும் தொண்டு அளப்பரியது.

இந்நூலகம் தமிழகத்தினர் மட்டுமின்றிப் பிற மாநிலத்தவரும் பிறநாட்டினரும் பயன்படுத்தி வருகின்ற ஓர் அரிய ஞான ஆலயமாகும்.

சித்தர்கள் எல்லாச் சமயத்திற்கும் அப்பாற்பட்ட சர்வசமய சமரச சன்மார்க்கத்தினைப் பாடியவர்கள். சாத்திரம் கோத்திரம் ஆகியவற்றை இகழ்ந்து தள்ளி மக்களிடம் பரிவும் அன்பும் கொண்டு மக்களில் மக்களாக வாழ்ந்த அவர்கள் மக்கள் உடலாலும் உள்ளத்தாலும் உயர்வுபெற முயன்றவர்கள். இவர்கள் மக்களின் நல்வாழ்விற்காக வகுத்ததே சித்த மருத்துவமாகும். தமிழ் நாட்டிலே பண்டுதொட்டு இன்றுவரை பரவலாகப் பயிலப்பட்டு வருவதால் சித்த மருத்துவத்தைத் தமிழ் மருத்துவம் என்பர். தமிழ் நாட்டில் உலோகங்களையும் இரச வர்க்கங்களையும் தமிழ் முறைப்படி நீற்றி பஸ்மங்களாகவும் சிந்தூரங்களாகவும் செய்வது மிக எளிய முறையாகும்.

நம் சரசுவதி மகால் நூலகத்தில் உள்ள சுவடிகள் தொகுப்பில் இச்சுவடிகள் "**அனுபவ வைத்திய முறைகள்**" பற்றிக் கூறுவனவாகும். இச்சுவடிகளை இந்நூலக தமிழ்ப் பண்டிதர் திருமதி ச. திலகம் அவர்கள் மிக நன்முறையில் பதிப்பித்துள்ளார்கள்.

இந்நூலில் அப்பிரகப் பற்பம், காந்த பற்பம், தாம்பிர பற்பம், இரச பற்பம், வங்க பற்பம், காரீய பற்பம், வேங்கில் பற்பம், திராபற்பம், பித்தளை பற்பம், எருகளை பற்பம், கொருடக்கல் பற்பம், கல்நார் பற்பம், நாக பற்பம் போன்ற 27 பற்பங்களையும், இரசசெந்தூரம் போன்ற செந்தூர வகையும், சுரக்குளிகை போன்ற குளிகை வகையையும் பற்றித் தெரிவிக்கப் பட்டுள்ளது. இவற்றின் பயனும் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்நூல் இரண்டாம் பதிப்பாக தற்போது வெளிவருகிறது.

இந்நூல் வெளிவர நிதி உதவி நல்கிய நடுவண் அரசுக்கும், நிருவாக அலுவலர் மற்றும் வெளியீட்டு மேலாளர் (பொறுப்பு) திரு. சாமி. சிவஞானம் அவர்களுக்கும், இந்நூல் அச்சில் வெளிவர, கணினி பிரிவில் பணிபுரிந்துவரும் அனைவருக்கும் எனது பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**சா. விஜயராஜ் குமார்**, இ. ஆ. ப.,
மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும்
இயக்குநர்,
சரசுவதி மகால் நூலகம்.

தஞ்சாவூர்.
26- 8 - 2006

## முன்னுரை

ஒரு இனத்தின் முதிர்ந்த பண்பாட்டை அளக்கும் கருவி பயன்பாட்டு அறிவியல் மருத்துவம் என்றே உறுதியாகச் சொல்லிவிடலாம்.

தமிழ் மண்ணுக்கே உரியதெனக் கருதப்பட்டுவரும் "சித்தமருத்துவம்" தமிழகத்தில் சித்தர்களால் உருவாக்கப் பட்டதாகும்.

சித்த புருஷர்கள் இந்த மண்ணில் அவதரித்து எத்தனையோ அதிசயங்களை நிகழ்த்தியிருக்கிறார்கள். மக்கள் வாழ்க்கைக்குத் தேவையான அனைத்தையும் தாங்கள் வாய்மொழியாகவே வழங்கி விட்டுச் சென்றுள்ளனர்.

ஆன்மீகம், தத்துவம், மனிதர்கள் வாழ வேண்டிய முறை, மருத்துவம் இப்படி அவர்கள் குறிப்பிடாத செய்திகளே இல்லை எனலாம். அந்தக் கால மரபுப்படி அவையாவும், குருசீடர் பரம்பரையாகவே வரவேண்டும் என்ற எண்ணத்தில் மறை பொருளாக பாடலாகவே பாடிவிட்டுச் சென்றுள்ளார்கள்.

அவர்கள் தங்கள் மனோசக்தியால் பல சித்து வித்தைகளையும், அரியசாதனைகளையும் செய்து வந்துள்ளனர். அதனால்தான் அவர்களின் உடலில் முதுமையும் மரணமும் அணுகாவண்ணம் இகபரலோக சுகத்தை அனுபவிக்க எண்ணி காயகல்ப மருந்துகளைத் தயார்செய்து பல்லாயிரம் ஆண்டுகள் சித்தர்கள் வாழ்ந்திருந்தனர் என்று தெரிகிறது.

அவைகளுள் ஒரு பகுதியே நம் சரசுவதி மகாலில் ஓலைச்சுவடிகளாக இடம் பெற்றுள்ளன. தமிழ்ப் பகுதியில் உள்ள மருத்துவப் பகுதியில் உள்ள சுவடிகள் மிகமிக அருமையான பலனளிக்கக் கூடியவையாக உள்ளன. அவைகளுள் சிலவற்றை நம் நூலகம் பதிப்பித்துள்ளது. அவற்றைப் பெற்று பலரும் பயனடைந்து வருகின்றனர். அவ்வரிசையில் இந்நூல் வைத்திய சாத்திரம் என்னும் அனுபவ வைத்திய முறைகள் என்ற பெயரில் வெளிவந்துள்ளது.

இந்நூலில் அப்பிரக பற்பம் முதலிய பற்பவகைகள், சூரண வகைகள், நீர்க்கடுப்புக்கு மருந்து, பிள்ளை வயிற்றில் இறந்தால் பிள்ளைவிழ மருந்து, காய்ச்சல் இருமல் தீர மருந்துகள் பிள்ளைகளுக்கு வரட்டு இருமலுக்கும், நெஞ்சு நோக்காட்டுக்கும் நெய் தயார் செய்தல் முதலியன கூறப்பட்டுள்ளன.

சிறு பிள்ளைக்கு வயிறு கழிச்சல் நிற்க, அக்கர காய்ச்சலுக்கு மருந்துகள், பெண்களின் பெரும்பாட்டுக்குச் சூரணம், அண்டவாதம் முதலியவற்றுக்கும் மருந்துகளும் செய்முறைகளும் கூறப்பட்டுள்ளன.

மேலும் விஷக்கடிகளான வண்டு கடிக்கு, விரியன் கடிக்கு, எலி கடிக்கு முதலியவற்றின் விஷத்தன்மைகளுக்கு மாற்று மருந்துகளும் கூறப்பட்டுள்ளன.

இந்நூலில் எளிதில் நாம் அறியும் மருத்துவப் பொருட்களும், அற்றை எளிதாகப் பயன்படுத்தும் முறைகளும் தெளிவாகக் கூறப்பட்டுள்ளன.

தமிழகத்தில் பாராட்டுக்குரிய சரபோஜி மன்னர் தஞ்சையை ஆண்ட காலத்தில் பல இடங்களிலும் பற்பல மொழிகளிலும் பற்பல சுவடிகளைச் சேகரித்து வைத்துள்ளார்கள். அவைகள் இன்றளவும் மக்களுக்குப் பெரிதும் பயன்பட்டு வருகின்றன. அவர்தம் நிலை பெற்ற

புகழ் போல், மேன்மை தங்கிய மக்கள் அனைவரும் தம்மிடமுள்ள அரிய சுவடிகளைச் சரசுவதி மகாலில் சேர்த்துத் தம் பெயர்களையும் நிலைநாட்ட வேண்டுமென விரும்புகின்றேன்.

இந்நூலினை வெளியிட பொருளுதவி புரிந்த நடுவண் அரசுக்கும், இதனைப் பதிப்பிக்க அனுமதியளித்த நூலக இயக்குநரும் மாவட்ட ஆட்சித்தலைவருமான திருவாளர் சி. கோசலராமன், இ.ஆ.ப., அவர்கட்கும், நூலக நிருவாக அலுவலர் திரு சாமி. சிவஞானம் அவர்கட்கும் வெளியீட்டு மேலாளர் திரு. அ. பஞ்சநாதன் அவர்கட்கும், இந்நூலினை நுண்ணாய்வு செய்த தமிழ்ப் பல்கலைக்கழக சுவடிப்புல பேராசியர் திரு வே. ரா. மாதவன் அவர்கட்கும், நூலை நன்முறையில் ஒளியச்சு மற்றும் ஒளியச்சுக் கோப்புச் செய்த நூலகப் பணியாளர் திரு. க. பத்மநாபன் அவர்கட்கும் எனது நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இதிற் காணும் குற்றங் குறைகளைப் பொறுத்து குணங்கொண்டு வாசித்தல் கற்றறிந்தார் கடனாகும்.

*தஞ்சாவூர்*
*10-8-2002*

**ச. திலகம்,**
பதிப்பாசிரியர்

# எமது வெளியீடுகள்

| | |
|---|---|
| குழந்தை பராமரிப்பு | 15-00 |
| 4448 வியாதிகள் ஒரு விளக்கம் | 50-00 |
| பாண்டுகாமாலை சிகிச்சை | 40-00 |
| பித்தரோக சிகிச்சை | 60-00 |
| பேதி அதிசார சிகிச்சை | 60-00 |
| பலதிரட்டு வைத்தியம் | 60-00 |
| சிரரோக சிகிச்சை | 60-00 |
| க்ஷய, உளமாந்தை சிகிச்சை | 18-00 |
| அக்கால சித்தவைத்திய அனுபவ முறைகள் | 40-00 |
| சூலை, குட்ட, மூல ரோக சிகிச்சை | 80-00 |
| தேரர் நீர்க்குறி சோதனை | 15-00 |
| வைத்திய ரத்னாவளி | 160-00 |
| வைத்தியத் திரட்டு | 60-00 |
| விஷரோக சிகிச்சை | 90-00 |
| வை த்திய சிந்தாமணி | 40-00 |
| வாதரோக சிகிச்சை | 60-00 |
| மேகவாகடத் திரட்டு | 50-00 |
| நீரிழிவு சிகிச்சை | 100-00 |
| பத்தியா பத்தியம் | 45-00 |
| வைத்திய ரத்னாவளி பாகம் - 2 | 70-00 |
| பிரம்மமுனி சூத்திரம் பாகம் - 2 | 100-00 |
| வாலை வாகடம் | 100-00 |
| அகத்தியர் நூல் திரட்டு | 25-00 |
| நாடிச்சக்கரம் | 40-00 |
| நயனரோக சிகிச்சை | 70-00 |
| மச்சமுனி நாயனார் 800 | 60-00 |
| மாடுகள், குதிரைகள், பறவைகள் வைத்தியம் | 40-00 |
| கொங்கணர் சரக்கு வைப்பு | 16-00 |
| ஜ்வர ரோக சிகிச்சை | 50-00 |

# வைத்திய சாத்திரம்
*என்னும்*
# அனுபவ வைத்திய முறைகள்

### 1. அப்பிரகப் பற்பம்

நெல் கனமாய்த்தட்டி சாண் அகலம், சாண்நீளம் வீளவேர் பலந்தானொன்று மெழுகுபோல் அரைத்துப்பூசி ஓட்டில் வைத்து, ஓடு மூடி சந்துவாய் சீலை செய்து, கெசபுடத்தில் வைக்க பற்பமாகும். இதை எடுத்து வைத்துக்கொண்டு எலுமிச்சம் பழத்தை நாலாகக் கீறி புதுச்சட்டியில் வைத்து அதிலே கையாந்தகரைச்சாறு நாழிவிட்டுக் காயவைத்துக்கொண்டு மேலே கூறிய பற்பத்தைப் பணவிடை வைத்துக்கொண்டு, சாப்பிடவும்.

***தீரும் நோய்கள்:***

பாண்டுவகை, குட்டம், சூலை, குறநோய் இவைகளுக்குத் தேனிலே கொள்ளத் தீரும்.

### 2. காந்த பற்பம்

சிறியான் நங்கை அமுரிவிட்டு, இடித்துச்சாறுவிட்டு, வில்லை செய்து, மூன்று நாள் காயவைத்து, வில்லைக் காய்ந்தபின்பு ஓடு மூடி சந்துவாய் சீலை செய்து, கெசபுடம் வைக்க நீற்றுப் போகும். கிராணி, சோகை தீர

மாதளங்காயைச் சாறு வார்த்து, சுக்கு அரைத்துக் கிண்டி காந்த பற்பம் பணவிடை ஒரு மண்டலம் கொள்ளத்தீரும்.

***தீரும் நோய்கள்:***

பாண்டு, சலக்கழிச்சல், மேகங்கள் சிறுப்பூ, அனுபானம் சஞ்சீவி சூரணத்தில் கொள்ளவும். மூலம் கிராணிக்கெல்லாம் லோக பற்பம் காந்தபற்பம் இரண்டுஞ் சேர்த்து சூரணத்தில் கொள்ளத்தீரும்.

**3. தாம்பிர பற்பம்**

தாம்பூரத்துட்டு 1 வாங்கி நெல்கணம் தகடாய்த் தட்டி ஆடாதோடை வேர், வெள்ளொச்சி வேர், சமனாய்ச் சேர்த்து எருக்கம் பால் விட்டு, அரைத்துத் தட்டின் மேல் பூசி ஓட்டில் வைத்து ஓடு மூடி சந்துவாய் சீலை செய்து மூன்று சீலை செய்து கெஜபுடத்தில் நீறுமது செந்தூரந்தான். அட்ட குன்மந்தீர சூரணத்துடனே தேனுங்கூட்டி இரு நேரங்கொள்ள வாயுவென்ற வர்க்கமெல்லாம் மாண்டு போகும்.

ரசம் தன்னை சுத்தி செய்து, கரந்தைச் சாறுவிட்டு, அரைத்து மூன்றுநாள் அரைத்த பின்பு அடை போலே தட்டி, உலரவைத்து ஓட்டில் வைத்தால் குக்குடத்தில், மாண்டு போகும்.

**4. ரசபற்பம்**

பணவெடையில் பதினெட்டேதான் பனை வெல்லத்தில் கொள்ள சயங்களெல்லாந் தீரும். அஞ்சுநாள் இரு நேரங்கொள்ளத் தீரும்.

**5. வங்கபற்பம்**

வெள்ளீயக்கட்டி வாங்கி நெல்கனமாய் அடித்து, தகடுபலம்1, ஆடுதோடாவேர்பலம் 1, வெந்தோணிக்கிழங்கு பலம் 1, அரைத்து மேலே பூசி ஓட்டில் வைத்து ஓடுமூடி கெசபுடத்தில் நீரும், மோகவகை இருபதுக்கும் பணவெடைதான் கொள்ளவும். ஆவாரை தயிலம் வாங்கி, தேன்விட்டு மத்தித்து, இரு நேரம் கொள்ளத் தீரும்.

***தீரும் நோய்கள்:*** சிறுப்பூ, கல்லடைப்பு, கிறிசனங்கள், சதையடைப்பு, பிரமேகம் தீரும்.

**6. காரீயபற்பம்**

முன்தகடு போல் தட்டிக்கொண்டு, மொச்சி இலை, கவசமாக, கை* அக்கியதோர் வெள்ளியீயம் பற்பம் போலே அளவாகப்புடம் போடத்தீரும்.

***தீரும் நோய்கள்:*** காந்தி, நீர்க்கடுப்பு, வறட்சி, உஷ்ணங்கள் தீரும்.

**7. வேங்கில் பற்பம்**

பசலை இலைதனை அரைத்துக் கவசமாக்கி ஓட்டில் வைத்து, கெசபுடந்தான் போட நீரிப்போகும். பணவெடை நெய் தேனில் உட்கொள்ளத்தீரும்.

***தீரும் நோய்கள்:*** சூலை, குன்மம், வாய்வு, சயரோகம், உளமாந்தம் தீரும்.

---

* ஏட்டில்உள்ளது

**8. தீராபற்பம்**

தராவில் தும்பை இலையைப்பூசி, கெசபுடத்தில் ஓட்டில் வைக்க தீராதகடு, நீறிப் போகும். நீர்ச்சிறுப்பூ, வண் சில்விஷயங்கள், குன்மங்கள், சடரோகங்கள், குட்டம், சூலை பதினெட்டும் தீரும். எட்டானவகை சூரணத்தில் தேன்கூட்டி இருநேரங்கொள்ள பத்து நாள் சாப்பிடவும்.

**9. பித்தளை பற்பம்**

காஞ்சிரை வேர் அரைத்துக்கண்டு, கனத்தில் பூசி வட்டான ஓட்டில் வைத்து ஓடு மூடி குக்குடத்தில் வைக்க மாண்டு போகும்.

***தீரும் நோய்கள்:***

வாய்வு குன்மத்தில் கிராணிமூலம், பாண்டு, நீர்க்கரைப்பூ, வாய்நீர் ஊறல், குடல்வாய்வு, கொண்டை முதலியன

***அனுபானம் : நெய்தனில் கொள்ளதீரும்.***

**10. எருகறை பற்பம்**

கஸ்தூரி அரைத்து அப்பி கெசபுடத்தில் போடவும் தீரும். பாண்டுவகை, வீக்கம், சோகை, மகோதரம், இஞ்சி தேனில் கொள்ளவும்.

**11. கெருடக்கல் பற்பம்**

ஆனைப்புலக் கிழங்கு அரைத்து அப்பினால் கெசபுடத்தில் மாண்டு போகும்.

***தீரும் நோய்கள்:*** கண்ரோகம், கடுப்பு, எலும்புருக்கி உள்வரட்சி, அஸ்திசுரம், உள்ளுருக்கிரோகம், வெட்டை முதலியன

**12. கல்நார் பற்பம்**

கொங்கிலவம் பட்டை தனை இடித்து, ஓட்டில் வைத்து அதின்மேல் கல்நாரை நடுவே வைத்து, மேற்படியும் பட்டையுள் பொடியே வைத்து, மேலோடு மூடி சீலை செய்யவும். கெசபுடத்தில் நீரிப்போகும். பற்பத்தைத் தேனில் கொள்ள மூட்டோடே அசைந்து பல்லுமிருகிப் போகும். சிலேற்பனத்தை அறுத்துப் போடும். உஷ்ணத்தை அடக்கிப் போடும். நாளொன்றுக்கு இரு நேரங்கொள்ள சயமிருமல் சுவாசகாசம், மந்தாரகாசம், மேகம் தீரும். தூதுவளை, லேகியத்தில் கொள்ளத்தீரும்.

**13. நாகபற்பம்**

எரிகாலிலிலை அரைத்து இடுகெசபுடந்தான் பன்ன அரைத்து வில்லை ரவகண்டேதான் ஓட்டிலே வைத்துச் சீலைசெய்தால் புடத்தில் நீரிப்போகும்.

***தீரும் நோய்கள்:***

கிராணி மூலம், ரோகம், வயிறு எரிவு, நெஞ்சு எரிவு, வாய்வு ரோகம் தீரும். கடுகு, திரிபலாதி, திரிலகரி, கஞ்சாம், மஞ்சள் சூரணித்து தேனில் கொண்டுவிட மண்டலந்தான் கொள்ளத் தீரும்.

### 14. வெள்ளிப் பற்பம்

பருத்தொரு ரூபாயை வாங்கி செம்முள்ளியிலை அரைத்து கவசமாய் செய்து, கொண்டு குகைக்குள்ளே வைத்து மூடிச் சில்லிட்டுச் சீலை செய்து முழப்புடத்தில் வைக்க நீரிப்போகும். பற்பத்தை சிமிழிக்குள் பதனம் பண்ணவும். குன்மம், நிரக்கட்டு நீர், சிறுப்பூச்சு, சுதையடைப்பு, கிறுகிறுப்பு, நெஞ்சிலுள்ள கபம் நீங்கிப் போகும். மூக்கிலுள்ள நீர்ப்பாய்ச்சல், பீனிசங்கள், மண்டைச்லை, புண்புரைகள், வாங்கி விடும். இதற்கு அனுபானம். அமுக்கிராவேர், சூரணந்தானுமே, தேன், நெய்யில் மண்டலங் கொள்ளத் தீரும்.

### 15. தங்கபற்பம்

தங்ககாசு வாங்கி, பனி தாங்கி மூலநந்தன்னை சாந்து போல அரைத்து அப்பி ஓட்டில் வைத்து சந்து வாய்சீலை செய்துகெசபுடத்தில்பற்பமாகபற்பமிதை வைத்துக் கொண்டு, கண்டங்கத்திரி லேகியத்தில் கொண்டாக்கால் சிலேற்பனம், தொண்ணூரத்தாறு சயரோகம், காசரோகம், உளமாந்தை தீரும். திரிகடுகு, லேகியத்தில் குன்மம், மகோதரங்கள், வாய்வு, நீர், பலசூலை, சிரசநோய், கண்ணோய் தீரும். குட்டம், சிறை நோய் எல்லாம் தீரும். தேனில் பத்து நாள் கொள்ள பிரமேகம், நீரிழிவுத்தீரும். நெல்லிக்காய், லேகியத்தில் வைத்து மெல்லக் கொண்டிடவே பித்தம் போகும். சிவனார் வேம்பு சூரணத்தில் தின்ன புண்புரைகள் சில் விஷங்கள், வண்டுகடி தீரும். வேம்பின் சூரணத்தில் தின்ன வாதம் எண்பதும் தீரும்.

### 16. கெந்தக பற்பம்

கெந்தகம் பலம் 10 கொண்டு வந்து குண்டு சட்டியில், பசுவின் பால் விட்டு வேடு கட்டி அதின் பேரிலே கெந்தகம் பொடி பண்ணி பரப்பி சட்டி கொண்டு மூடிச் சீலை மண் செய்து ஆறு நாழிகை வேகவைத்தால் கெந்தகம் உருகி பாலில்

விழுந்திருக்கும். அதையெடுத்து கத்தாளஞ் சாறு முன்போல விட்டு வடிகட்டி, கெந்தகம் பரப்பி அந்தப்படி வேகவிட்டு எடுத்து பசுவின் நெய்யில் எடுத்துக்கொண்டு மஞ்சள் சாறு, இஞ்சிச்சாறு நீர் விட வயிற்றுவலி தீரும். திமிட்டிப் பழத்திலிட ஊதுகாமாலை தீரும். குப்பைமேனிச்சாற்றிலிட இருமல் தீரும். பசுவின் நெய்யிலிட உளமாந்தைத் தீரும். சாரணச் சாற்றிலிட கிராணி தீரும்.

**17. மண்டூர பற்பம்**

அதிகமாஞ் சோதி சாணங்கரைத்துப் பூச மண்குகையில் போட்டு, சில்லிட்டு, சீலைகொண்டு வாயில் செய்து பத்தியுடன் கெசபுடத்தில்குகை நீரின், பரிசான வார்த்து போல நீரிப் போகும். எடுத்து வைத்துக்கொண்டு தேனில் கொள்ளவும். பணவிடை கொள்ளவும்.

***தீரும் நோய்கள்:*** பாண்டுவகை, வீக்கம், விஷபாகம், விஷநீர் எல்லாந் தீரும்.

**18. அஞ்சனக்கல் பற்பம்**

புளியஞ்சிரை, குகையாய் பண்ணி மேல் மூடி கொண்டு செய்து. அஞ்சனக்கல் நிரையாய்ப் போட்டு, மண்சீலை செய்து கெசபுடத்தில், சங்கது போல நீறிப் போகும். வைத்துக்கொண்டு தேனில் கொள்ளவும். தண்ணியிலே போட்டவுடன் மிதக்கும். வைத்தியம் இருபதுக்கும் தேனில் கொள்ளத் தீரும்.

**19. தாளக பற்பம்**

தலையோடுதனைப் பொடித்துக் கொண்டு சுண்ணாம்பு தண்ணீர் விட்டு, அரைத்து குகையாய்ப் பண்ணி மேல்மூடி

ஒன்று காணவைத்து அதினுள்ளே களிப்பாக்கான தாளகத்தின் கட்டி வைத்து சீலை செய்து காயவைத்து காய்ந்த பின்பு குக்குடத்தில் நீறிப் போகும். வைத்துக்கொண்டு தேனில் கொள்ளவும்.

***தீரும் நோய்கள்:*** சயரோகம், மந்தாரகாசம், கபமீளை, இருமல், உளமாந்தை குறை, நோய் குட்டம், வண்டுகடி, எலிக்கடி எல்லாந்தீரும்.

**20. சாதிலிங்கபற்பம்**

சாதிலிங்கக்கட்டி வாங்கி சிவழூலிவேருபட்டை, அரைத்துக் கட்டி குகைதனிலே வைத்து, மூடி சந்து வாய்சீலை செய்து குக்குடத்தில் நீறிப்போகும். தேனில் கொள்ளவும்.

***தீரும் நோய்கள்:*** குன்மவாய்வு, சன்னிவாதம், பாரிசவாயு, சூலை, இருமல், ஈளை, இளைய பூசுரமுந் தீரும்.

**21. வீரபற்பம்**

அப்பைக்கிழங்குதனைக் குகையாய் செய்து வீரந்தன்னைக் குகைக்குள் வைத்து, சில்லுப் போட்டு, சீலை செய்துக் கெசபுடம் போடவும். நீறும், நெய்யிலாவது தேனிலாவது இருபணவிடை கொள்ளவும்.

***தீரும் நோய்கள்:*** சூலை, குன்மம், வாய்வு தீரும்.

**22. பொரிகார பற்பம்**

பொரிக்காரக் கட்டியை வாங்கி சங்கை நீத்து, அரைத்து குகையாய் செய்து அதனுள் சில்லும் செய்து குகையில் நிரைய பொரிக்காரம் வைத்து வரைந்திடும் சீலை செய்து குக்கிடம்

வைத்து காரம் நீரும் நெய்யில் தேனில் கொள்ள நீர்க்கடுப்பு மாறும். கல்லடைப்புந் தீரும். துத்தியதசையடைப்பும், நீர்த் தோஷம் தீரும்.

### 23. சாத்திர வேதி பற்பம்

முலைப்பால் அதனிடை எருக்கம்பால் சேர்த்து, மேற்படி சரக்கைக் குழி அம்மியில் போட்டு ஷெ பால் விட்டு அரைத்து உருண்டை செய்து குக்கிடம் போட நீரும். கடுப்புக் குத்து பாணியும், புண்ணும் தீரும். பசு வெண்ணெயில் கொள்ளவும்.

### 24. குந்திருக்க பற்பம்

பன்றியின் பாலை விட்டு, அரைத்து உருண்டை செய்து, ஓட்டில் வைத்து மேலோடு மூடி மண் சீலை செய்துக் குக்கிடத்தில் போட நீரும். கடுப்புக் குத்து பாணியும், புண்ணும் தீரும். பசுவெண்ணெயில் கொள்ளவும்.

### 25. பவளபற்பம்

முசலின் ரத்தம் விட்டு அரைத்துக் காயவைத்துச் சட்டியில் வைத்து மேல் ஓடு மூடி குக்கிடத்தில் நீரும். தூதுவளை நீர் அல்லது தேன் நீறு கொள்ள சயங்கள் அகன்று போகும். இருமல், காசந்தீரும்.

### 26. வயிர பற்பம்

பெண்டுகள் சுரோணிதத்தைப் பேணி விட்டரைத்து, வில்லை செய்து, காயவைத்து ஓட்டில் வைத்துக் கெசபுடத்தில் தீர்க்கமாய் நீரிப்போகும். நித்தியந் தேனில் கொள்ளவும்.

### 27. இரத்தின பற்பம்

உமரியை அரைத்துக் கொண்டு குகை போல பண்ணி அதினுள்ளே ரெத்தினம் வைத்து சில்லுப் போட்டு, சுத்தியே சீலை செய்து குக்குடத்தில் நன்றாய் நீரும். இந்த பஸ்பத்தில் ஒளிந்திடும் நோய்களெல்லாந் தீரும்.

### 28. நாலு நாளை மாறலுக்கு

மிளகு பொடி கதலிப் பழத்துக்குள் வைத்து நூல் கொண்டு, சுத்தி உமிக்காந்தலில் சுட்டு குளிர் வந்த உடனே மூணுநா ள் தின்ன நாளை மாறல் தீரும்.

### 29. நீர்க்கடுப்புக்கு

அத்திப்பழம் பூ தட்டிப் போட்டு, ஒரு பிடி பழுப்பு புதுச்சட்டியில் போட்டு இரண்டு படி தண்ணீர் விட்டு 1/4 படியாகக் காய்ச்சி இப்படி மூன்று நாள் ஆறு பொழுது கொடுக்க நீர்க் கடுப்புத் தீரும்.

### 30. இரசச் செந்தூரம்

கெந்தி புளியாரைச் சாத்தில் செனிப்படங்க அரைத்து அண்ட மஞ்சக் கருவை வைத்து அரைத்து, மருந்தைப் போட்டு மற ஓடு கொண்டு மூடி புளியாரை அரைத்து விரல்கனம் கவசம் கட்டி ஒரு சீலை மண் செய்து சாணம் புடம் இடச் செந்தூரம்.

### 31. நாலு நாளை மாறலுக்கு

பொன்னாங்கானி இலையும் வேரும் சீந்தித் தண்டு இலையும் கருக்கிப் பசுவின் பாலில், பிசைந்து பிழிந்துப் போட்டு ஆழாக்கு நல்லெண்ணெய் விட்டு எரித்து, வடித்து சிவந்த குங்கிலியம் பொடி செய்து தூவி இறக்கி கொடுக்க நாலு நால் மாறல் தீரும்.

## 32. சுரக்குளிகை

கெவுரிப் பாஷாணம். துத்தம். துருசு, கெந்தகம், ஆக இவ்வளவும் சமனாகக் கூட்டி, ஊமத்த இலைச் சாறு விட்டரைத்து மிளகு அளவு உருண்டை பண்ணி குளிர் வந்த சுரத்துக்கு இஞ்சிச் சாத்திலிடவும். விடா சுரத்துக்கு முலைப்பாலிடவும். பத்தியம் பால், கஞ்சி சாப்பிடவும்.

***பிள்ளைகளுக்கு:*** *(பிள்ளை வயிற்றில் இறந்தால் விழ மருந்து)*

பிள்ளை வயித்தில செத்தால் மூணு வருஷத்துக்கு பருத்தியிலை கொண்டு வந்து அரைத்து நெய்யில் குழப்பி விழுங்க பிள்ளை விழும்.

### வேறு

*சீறியவன் வயது சீறி சிலந்திடும்*
*சீறிபார்க்கும் கறியுடன்*
*சோறு கக்கும் கையினில் தங்காது*
*சத்தும் ஆறே*
*சோரும் பிள்ளை அரைக்கும்*
*கீழ் குனிந்திருக்கும்*
*வெறிக்கப்பார்க்கும்*
*விஷமுள்ள மாந்தந்தானே.*

***பிள்ளையளுக்கு, மாந்தமானால் செய்யுங்குணம்:*** *சீறியவன் வயிறு சீறி சிலத்திடும். சீறிப் பார்க்கும். கறியுடன் சோறு கக்கும். கையினில் தூங்காது. சத்தும் ஆறே. சோரும் பிள்ளை அரைக்கும். கீழ் குளுந்திருக்கும். வெறிக்கப்பார்க்கும். விஷமுள்ள மாந்தந்தானே. பிள்ளையும் கனத்திருக்கும். பிரண்டைபோல பின்னலாகும். உள்ளமும் அஞ்சி வந்து, கன்னி உடம்பினில் வேடித்துக் கட்டித்*

துள்ளியும், கயித் தூங்காது. துணுக்கெனச் சுழலும். பிள்ளைக மாங்குரலுமந்தாழ்ந்து கண் குளிந்திருகுந்தானே. இந்தப்படி உள்ள குணம் பிள்ளையிடத்தில் கண்டால் மாந்தமென்றறிந் கொள்ளலாம்.

***மாந்த வகைக்கு மருந்து:*** குட்டி கறுக்கா வேரு, வரப்பூலா வேர், நரி கின்னி வேர், சன்னி நாயன் வேரும், உ வசம்பு, நல்லெண்ணெயில் கொதிப்பித்து தாய் முலையில் தடவிவர முலைக் குத்து தீரும். அல்லது உத்தம தாளி வேர் சாரணை வேர், மிளகு தக்காளி வேர், பாகல் வேர், ஒரு பிடி மிளகும், உள்ளி, வசம்பு, கருஞ்சீரகமும் இவை எல்லாம் நெய்யிலரைத்து உள்ளே கொடுக்கவுந் தீரும். அல்லது மூணு ஆவரை இலையும், மூணு பீளை இலையும், மூணு அவரை வேரும் விளாவிலையும் அரைத்து உள்ளுக்குக் கொடுத்து துவாலை இடவும் தீரும். அல்லது கற்றொடி வேரும், கொம்மட்டி வேரும், சூரை வேரும் இது மூன்றும் குளுசமா பிள்ளைக்குக் கட்ட மாந்தம் குணமாம். அல்லது நீர்ப்பூலாத் தோலும், முருங்கை வேரும், பச்சரிசியும் இடித்துத் தாய் தின்ன பிள்ளைக்கி மாந்தம் முதலான பிணி தீரும். அல்லது பிடா வேர், காயா வேர், பொடுதலைச்சம் மூலமும், சங்கங் குப்பி, புங்க வேர், உத்தாமணிச்சம் மூலமும், உள்ளி வசம்பு மிளகும், கடுக்காயும் அசமதாகமும், திப்பிலியும், கோஷ்டமும் இதை அரைத்து வைத்துக் கொண்டு முருங்கை இலைச்சாறு உழக்கு உத்தாமணிச்சாறு உழக்கு, கள் சாறு உழக்கு, நல்லெண்ணெய் உழக்கு, ஆமணக்கெண்ணெய் உழக்கு இதெல்லாம் கூட்டி அரைத்து இருந்த மருந்தையும் கூடப் போட்டு கொதிக்க வைத்து மெழுகு பதத்திலே வடித்து வைத்துக் கொண்டு, உள்ளே கொடுக்க மாந்தமெண்ணப் பட்டதெல்லாந் தீரும்.

பிடா இலைச்சாறும், ஆனா இலைச் சாறும், சாரை இலைச் சாறும், வேலிப்பருத்தி இலைச் சாறும், பேய்ப்பீர்க்கிலைச் சாறும், இவை சமனாகக் கூட்டி கருஞ்சீரகம், அசமதாகம், உள்ளி, வசம்பு அரைத்து எருமை

வெண்ணெய் கொதுப்பித்துக் கொடுக்க வயிறு கழிகிறது நிற்கும்.

### வேறு

சூரை இலையும், உத்தாமணி இலையும், உபாய வேரும், கருஞ்சூரை வேரும், சாறணை வேர், பொடுதலை வேர், குப்பை மேனி வேர், வேலிப்பருத்திவேர், பாகல் வேரும், உள்ளி வசம்பு, கடுக்காய், ஈர வெங்காயம் இவை எல்லாம் அரைத்து ஆமணக்கு எண்ணெயில் கொதிப்பித்து, பிள்ளைக்கு பேராமாந்தமாய் இருந்து வயிறு கழியாமல் இருந்தால் உள்ளே கொடுக்க வயிறு கழியும்.

வேலிப்பருத்திவேர், நிலப்பனை வேர், சாரணை வேர் இது சமனாகக் கூட்டி, விளக்கெண்ணெயில் கொதிப்பித்து வித்து முலையில் தடவிதடவி முலைக் குடுக்க வயிறு கழியும்.

### பேய்மாந்தமது செய்யும் குணம்

பருகுபருகென்று பார்க்கும். வலிப்பெடுக்கும், அழும் பலகுணம் பண்ணும். போகிறெனக் கழியும்.

**இதற்கு மருந்து** : கைய்யான் தகரை இலை, வேலிப்பருத்தி இலை, ஆனா இலை, பானை இலை, செருப்படி இலை, குப்பை மேனி இலை, சாரணை இலை, இதுவெல்லாம் சமனாகக் கூட்டி சட்டி காயவைத்து அதிலே தீவைத்து நல்லெண்ணெய் உழக்கு விட்டு உள்ளி வசம்பு கூடப்போட்டு, சேராகக் கொதிக்க வைத்துப் பதத்திலே இறக்கி வைத்துக்கொண்டு முலைப்பாலிலே ஒரு காசிடை உள்ளுக்குக் கொடுத்து மேலும் தடவவும். பேய்மாந்தம் தீரு

### காய்ச்சலுக்கு மருந்து

ஆனை நெருஞ்சி ஈர்க்கு ஒரு பிடி
பானுயீர்க்கு ஒரு பிடி

பேய்ப்பீர்க்கு ஒரு பிடி
விஷ்ணுக்கிராந்தி ஒரு பிடி
நன்னாரி வேர் ஒரு பிடி
தூதுவிளை வேர் ஒரு பிடி
சீந்தில்தண்டு ஒரு பிடி
ஓரிலைத்தாமரை ஒரு பிடி
சிறுகீரை ஒரு பிடி
பொன்னாங்காணி ஒரு பிடி
வெதுப்படக்கிவேர் ஒரு பிடி
இஞ்சிவேர் ஒரு பிடி

இதையெல்லாம் நறுக்கிப்போட்டு

ஏலம்
இலவங்கம்
செண்பகப்பூ
செங்கழுநீர்
கோஷ்டம்
அதிமதுரம்
சாதிக்காய்
பற்பாடகம்
கொத்தமல்லி

இதையெல்லாம் இடித்துப்போட்டு குறுணி நீர விட்டு உரியாகக் காய்ச்சி வைத்துக் கொண்டு கடைச் சரக்கை அரைத்து நீரில் கலந்து மூன்று நாளைக்குக் கொடுக்கக காய்ச்சல் தீரும்.

பொடுதலைக்காய் ஒரு சிரங்கைக் கொண்டு வந்து காயவைத்து வறுத்து அதிலே இருநாழி மோர் வ

ஊறவைக்க மோர் முறிஞ்சிருக்கும். அந்தத் தண்ணீரை இறுத்து ஆறவைத்துத் தாகமான நேரம் குடுக்கத் தாகம் தீரும். அல்லது வில்லை வேர் இரு நாழி தண்ணீரிலே போட்டு நாழியாகக் காய்ச்சி வைத்துக் கொண்டு தாகத்துக்குக் கேட்ட நேரம் கொடுக்கத்தாகம் தீரும்.

வெளிச்சப் பிசின்
ஈரவெங்காயம்
கருஞ்சீரகம்
நல்லமுள்ளிவேர்
சாரணை வேர்
மிளகறணை வேர்

இவையெல்லாம் சமனாகக் கூட்டி அரைத்து உழக்கு சித்தாமணக் கெண்ணெயில் கொதிப்பித்து வைத்துக்கொண்டு காசித்தினை எண்ணெய் உள்ளுக்குக் கொடுத்து மேலும் துவாலை இடவும். இருமலும், வழலைக் கட்டும், வயிறு பொருமலும் காய்ச்சலும் தீரும். கரப்பான் மேலே வெடித்திருந்தால் மேலே தடவவும்.

தூதுவளை சம்மூலமும், வேலிப்பருத்திச் சமூலமும், சமனாகக் கொண்டு வந்து துவைத்துச் சாறு பிழிந்து விறகு வைய்க்கோ சும்மா நிலத்லே குத்திச்சுட, கையினாலே குழப்பி, உச்சந்தலை தொடுத்து உடம்பெல்லாம் பூசவும். பிள்ளைக்கு வயிறு கழிந்து பொருமலும் காய்ச்சலும் நிற்கும்.

வில்லை வேர், பாவட்டை வேர் பிடுங்கி இழைத்த பொடி இது சேர ஒரு அளவாய்க் கூட்டி சட்டி காயவைத்து வறுத்து அதிலே நாழித் தண்ணீர் விட்டு ஊறவைத்து ஒவ்வொரு பாலாடை இரண்டு நேரம் கொடுத்து வரவும். இதிலே தவனமெடுத்து நாவுலர்ந்தால் தண்ணீர்மிட்டான்

கிழங்கு கொண்டுவந்து நரம்புத் தோல் போக்கி துவைத்துச்சாறு கொண்டு நற்சீரகம் அரைத்துக் குழப்பி உள்ளே கொடுக்கவும். தவனமும், மாந்தமும் தீரும்.

பாவட்டை ஈர்க்கி ஒரு பிடி
அனுஈர்க்கி ஒரு பிடி
பானு ஈர்க்கி ஒரு பிடி
மாவிலங்க ஈர்க்கி ஒரு பிடி
நுணா இலை ஈர்க்கி ஒரு பிடி

இது சட்டியிலே போட்டு சுக்கு, மிளகு, கடுக்காய் முடிந்து கூடப் போட்டு இருநாழி தண்ணீர் விட்டு, நாழியாகக் காய்ச்சி வைத்துக்கொண்டு, ஒவ்வொரு பாலாடை இரண்டு நேரமும் கொடுக்கவும். மாந்த சுரமானதெல்லாம் தீரும்.

**நீர்க்கணத்துக்கு:**

பருத்திப்பிஞ்சு
அத்திப்பிஞ்சு
துடரிப்பிஞ்சு
ஆவாரைப்பிஞ்சு
கருஞ்சீரகம்

நறுக்கி முலைப்பாலிலாவது பிசைந்து சீலையில் பொட்டணமாகப் பிடித்துப் பிழிந்து அந்தச்சாற்றிலே பசுவின் வெண்ணெயைக் குழைத்து உள்ளே கொடுக்க நீர்க்கணம் தீரும்.

**பிள்ளைகளுக்கு வறக்கணத்துக்கு இதுக்குக் குணம்:**

நாக்கு வெளுத்திருக்கும். வறக்கணத்துக்கு தூதுவளை வேரும், இலையும், துவைத்துச்சாறு பிழிந்து கொண்டு அந்த மருந்திலே கூட்டிக் குடிக்க வறக்கணம் தீரும்.

**நீர்க்கணமானால்:**

முருங்கை இலையை வாயினாலே உருவி உள்ளி வசம்பு சுட்டு வைத்துக்கொண்டு கூடப் போட்டு மென்று, அந்தச் சாத்திலே இரண்டு காசிடைச்சாறு உமிஞ்சு முலைப்பாலில் சாரித்து உள்ளே கொடுக்கவும். வயிறு பொருமல் தீரும்.

**காய்ச்சல் இருமல் தீர மருந்து:**

ஆனா வேர்
பானு வேர்
பாவட்டை வேர்
சங்கவேர்
கிளாவேர்

சமனாக்கூட்டி நறுக்கி உள்ளி வசம்பு ஒரு பிடி அசமதாகமும் கூட ஒரு சட்டியிலே போட்டு இரு நாழி தண்ணீர் வார்த்து, நாழியாகக் காய்ச்சி, உள்ளே கொடுக்கக் காய்ச்சலும், இருமலும் தீரும்.

பிள்ளைகளுக்குக் கணம் வயத்திலே தாக்கி வயிறு கழியாமல் வலிச்சு அழுகிறதுக்கு மருந்து. பிள்ளைகளுக்கு நெஞ்சுக் கட்டுக்கும், இருமலுக்கும் வளலை விட மருந்து. பிள்ளைக்கி வறட்சி இருமலானால் மருந்து பிள்ளைக்கி மாந்தமாய், வேப்பிலைச் சாறு போலே கழிஞ்சா மருந்து, பிள்ளைகளுக்கு பல தோஷமாய் உடம்பு வத்தி மெலிந்தால், பிள்ளைக்கிக் குளிசம் கட்ட மருந்து.

முடிக்கொத்தானும், ஈரவெங்காயமும் நறுக்கி சித்தாமணக்கெண்ணெயில் தொதிக்க வைத்து உள்ளுக்கும்

கொடுத்து வயிற்றில் தடவ தீரும். தினமும் நல்ல வேளை வேர் ஒரு வேரும் தாளிப்பூவும் கூட்டி நறுக்கி முலைப்பாலில் பிசிறி சீலையில் பொட்டணமாகப் பிடித்து பிழிந்து அந்தச் சாறு உள்ளேகொடுக்கக் கணம், வயிறு வெந்ததும், வயிறு வலித்து அழுகிறதும் தீரும்.

துளசி இலை ஒரு பிடி, மிளகுத் தக்காளி இலை ஒரு பிடி புழுங்க அரிசியும் ஒரு சிரங்கைக் கூட அரைத்து நெய் வார்த்து அடை சுட்டுத் தினம் ஐந்து அடை தாயார் தின்னவும். பத்தியம் காக்கவும்.

பிள்ளைகளுக்கு வரட்டி இருமலுக்கும் நெஞ்சு நோக்காட்டுக்கும் நெய் பண்ண

தூதுவளை வேர்
செம்முள்ளி வேர்
நன்னாரி வேர்
சாரணை வேர்
சித்தாமுட்டி வேர்
பேராமுட்டி வேர்
செங்கத்தாரி வேர்
பேராமுட்டி வேர்
செங்கத்தாரி வேர்
சிறுகீரை வேர்
சீதரசெங்கழுநீர்
ஓரிலைத்தாமரை வேர்
வில்வ வேர்
பொன்னாங்காணி வேர்

இந்த வேர் எல்லாம் சமனாக ஒவ்வொரு பிடி

கருஞ்சீரகம்
வெளிச்சைப்பிசின்
ஏலம்
இலவங்கம்
செண்பகப்பூ
செங்கழுநீர்
கோஷ்ட்டம்
அதிமதுரம்
சாதிக்காய்
கொத்தமல்லி
நற்சீரகம்

இவை ஒவ்வொரு பலமும், ஈரவெங்காயம் இரண்டு பலமும் ஆகக் கூட்டி முருங்கிலையும் தூதுவளை இலையும் சமனாகக் கொண்டு வந்து துவைச்சு அதுலே நாழிச்சாறு பிழிந்துகொண்டு, அதிலே நாழிப் பசுவின் நெய் விட்டுக் கலந்து அதிலே முன் சொன்ன வேர் வகையும், கடைச்சரக்கையும் அரைத்துக் கூடப்போட்டு கொதிக்க வைத்து மெழுகு பதத்திலே வடித்துக் கொண்டு பிள்ளைக்கு இரண்டு காசெடை அந்தி, சந்தி, கொடுத்துவர எல்லா வரட்சியும், வழலைக்கட்டும் தீரும். இதுக்குப் பத்தியம், கைப்பு, புளிப்பு, பிலாத் தொடாமல் இருக்கவும்.

ஒரு பாக்களவு ஊனுப்பருப்பும், முத்தின முருங்கையிலையும் உள்ளி வசம்பு கூட்டி, நறுக்கி நீர்ச்சுவற வறுத்துச் சீலையிலே பொட்டணமாகப் பிடித்து முலைப்பால் வாங்கி அதிலே பொட்டணத்தை வைத்து உள்ளங் கையில் மத்திச்சுப் பிழிந்து பிள்ளைக்கு உள்ளே கொடுத்து உச்சந்தலையிலும் தடவவும். நாடி நரம்பெல்லாம் தடவவும். இந்த மருந்து மூணு நாளைக்கி இரண்டு நேரமும் கொடுத்துத் தடவவும். கைப்புப் புளிப்புத் தவிரவும் தீரும்.

**பிள்ளைகளுக்குக் கரப்பானாக உடம்பெல்லாம் வெடித்தால் எண்ணெய்**

இலை ஒரு பிடி, சங்க இலை ஒரு பிடி,தூதுவளை ஒரு பிடி, கடுக்காய், மிளகு இதுவெல்லாம் நறுக்கி, உரி தண்ணீர் ஊற வைத்து உள்ளே கொடுக்க இருமல் தீரும்.

கடுக்காய் 15
ஈரவெங்காயம் பலம் 10
கருஞ்சீரகம் ஒரு சிரங்கை
கள்ளிப்பால் ஒரு சிரங்கை

இதுவெல்லாம் சித்தாமணக்கெண்ணெயில் கொதிப்பித்து வைத்துக்கொண்டு, பிள்ளைக்கி நாலு காசிடை உள்ளே கொடுக்கவும். தாய், பத்தியம், புளிப்பு நீக்கவும். இ வீக்கம் தீரும்.

கிரந்தி நாயகம் வேரும், விரையும் தகரை விரையும் வேரும், குண்டுமணி விரையும் வேரும், குட்டி வேளை வே வெம்பாடை வேர், புளிதுடக்கி வேர், நெய்க்காயாய் வேர்

வாகை வேர்
வேப்பவேர்
இலுப்பை வேர்
புங்கவேர்
பெரும்பிராணி வேர்

இதுவெல்லாம் ஒவ்வொன்று இரண்டு காசெடை கூட்டி நறுக்கி பூத கரப்பான் பட்டை, கார்போகரிசி, கெந்தக இதுவும் இரண்டு காசெடை நறுக்கி நல்லெண்ணெயில் கொதுப்பித்து வைத்துக்கொண்டு பிள்ளைக்கிக் காலமே மோ

வயிறு நிரம்பப் புகட்டி மேலுக்கு எண்ணெயிட்டு பகலில் மேலாய் இலுப்பைப் பிண்ணாக்கு அரைத்துக் குளிப்பாட்டவும். மூன்று நாளைக்குள் கொள்ளிக் கரப்பான் தீரும்.

குட்டிக்குருஞ்சாவேர், குட்டிவிளாவேர், கெய்கத்தாரி வேர், மிளகரணை வேர், உள்ளி, வசம்பு, கருஞ்சீரகம், நல்லெண்ணெயில் கொதிப்பித்து மேலுந்தடவி தலையிலும் இடவும். இனி உள்ளுக்குக் கொடுக்கவும். மருந்து நன்னாரி வேர், மேல் தோலைச் சீவிப் போட்டு, நற்சீரகம், கூட்டி அரைத்து நல்லெண்ணெயிலாவது நெய், பாலிலாவது கொதிக்க வைத்து உள்ளே கொடுக்க சட்டைக்கரப்பான் தீரு

**பிள்ளைகளுக்கு வயிறு கழியவும், வயிறு கழியாமல் இருக்கவும் மருந்து**

வேலிப்பருத்தி வேர், நிலப்பனை வேர், சாரணை வே மூன்றுங் சனங்கூட்டி விளக்கெண்ணையில் கொதிப்பித்து வைத்துக்கொண்டு முலையில் தடவி முலைகுடிக்க, பிள்ளைக்கு வயிறு கழியும். புங்கம் பட்டை, ஆமாங்குருத வேர், வெளுங்க வேர், பெருமருந்து வேர், முன்னை வேர், கோறுங் கொடி வேர், பாவட்டை வேர் இதுவெல்லாம் சமங் கூட்டி விளக்கெண்ணெயில் பிசைந்து சூரிய புடமாக வைத்து பெரிய பிள்ளையளுக்கு பெரிய மனுசனுக்கு கொடுக்க வயிறு கழியும்.

வெக்கவேளை ஒரு பிடி
பேய்மல்லிகை ஒரு பிடி
மருக்காரை ஒரு பிடி

இது மூன்றும் ஆய்ந்து கொண்டுவந்து கருகாமல் பொன் நிறமாக வறுத்து அ திலே நாழித் தண்ணீரில் சுக்கு, மிளகு,

அசமதாகமும், மூன்றும் சமனாகக் கூட்டிக்கொண்டு பொட்டணத்தில் மருந்து நேக அரைத்து அதை நீரில் கரைத்து சற்று சூடாகக் குடிக்கத் தீரும்.

சித்தாமணக்கெண்ணெய் ஒரு சிறங்கை
ஈரவெங்காயச்சாறு ஒரு சிறங்கை

அதிலே

உள்ளி, வசம்பு
குருவிச்சங் கொழுந்து
கோழியாவரை கொழுந்து

இது சமனாகக் கூட்டி நறுக்கிப் போட்டு கொதிப்பித்துக் கொடுக்க வயிறு பொருமல் தீரும். வயிறு கழியும்.

**பிள்ளைகளுக்கு இரத்தக் கடுப்புக்கு:**

புளிய வேரில் மேல் தோல் சீவிப் போட்டு இழைத்து சாந்து போலே அரைத்து இரண்டு பாக்கு அளவு பசுவின் பால் தயிரில் கரைத்து மூன்று நாள் கொடுக்க வயிறு கடுப்புந் தீரும்.

**பிள்ளைகளுக்கு வயிறு கழிய, கட்டுவிட:**

அத்திவேர்
ஆவாரை வேர்
துடறி வேர்
மாவேர்
உதயவேர்
புளிய வேர்
துவரை வேர்
நெல்லிமுள்ளி
நற்சீரகம்

இதுவெல்லாம் ஒரளவாக அரைத்து எருமைத் தயிரில் அந்த தகரை பொட்டணங் கட்டி வர வடித்துக் கொண்டு அதிலே

அந்த மருந்துகளைக் குழப்பி உள்ளே நின்னக் கொடுக்க இரத்தக் கடுப்பும், சீதக்கடுப்பும் தீரும். மூன்று நாளைக்குக் கொடுக்கவும்.

**பிள்ளைகளுக்கு வயிறுக் கடுப்புக்கு மருந்து:**

ஆனாவேர்
பானாவேர்
நன்னாரி வேர்
குட்டிவெல்லா வேர்
குட்டி விளா வேர்
விடத்தகரை வேர்
வில்லை வேர்
சங்க வேர்
அப்பைக் கிழங்கு

இதுவெல்லாங் சமனாகக்கூட்டி, அரைத்து வைத்துக்கொண்டு மிளகு, வெங்காயம், சுக்கு, கடுக்காய், அசமதாகம், பெருங்காயம், கடுகு, திப்பிலி, உள்ளி, வசம்பு கரப்பான் பட்டை, கருஞ்சீரகம், வெளிச்சைப்பிசின், கத்தூரி மஞ்சள், கடுகுரோகிணி, கிராம்பு, நாகப்பூ, அரத்தைக் கூடப் போட்டு, சிற்றாமணக்கெண்ணெய் ஒரு படி விட்டு, கொதிக்க வைத்து, மெழுகு பதத்தில் வடித்துக் கொண்டு மூன்று நாளைக்கொருநாள் காசத்தனை உள்ளே பிள்ளைக்குக் கொடுக்க வயிறு கழிந்து போகும். பசியும் உண்டாகும். குடித்துச் செரிக்கும், ஒரு நசவும் வராது. எல்லாவற்றிற்கும் நல்லது.

**வேறு**

துடரிவேர்
இலவம்பிசின்
தாணிக்காய்

முக்கிளுவை வேர்
நெல்லிப் பருப்பு

இவை சமனாகக் கூட்டி அரைத்து எருமைத் தயிரிலே கொடுக்கக் கசப்புத் தீரும். அல்லது பெருமரத்தின் சிராயைத் துவைச்சுச் சாறு கொண்டு அதிலே

சுக்கு
மிளகு
அசமதாகம்

அரைத்துக் கலந்து காய்ச்சி எருமைத் தயிரில் கலந்து கொடுக்க கடுப்புத் தீரும்.

**வேறு**

கடுக்காய்
கருப்பந்தண்டு
கீழ்க்காய்நெல்லி

சமனாகக் கொண்டுவந்து நறுக்கி இருநாழித் தண்ணீரில் போட்டு நாழியாகக் காய்ச்சி பகல் எல்லாம் வெய்யிலிலே வைத்து ரவையாக்கி உரியாகக் காய்ச்சி உண்டு, படுக்கும் பொழுது குடிக்கத் தீரும். இந்த மருந்து பெரிய மனுஷரும் குடிக்கலாம். வெள்ளுடம்பு கழிச்சல் தீரும்.

**பிள்ளைகளுக்கு வெள்ளுடம்பாகக் கழிந்தால் மருந்து:**

தைவேளை வேர்
செங்கத்தாரிப்பட்டை
அப்பைக்கிழங்கு
கருஞ்சீரகம்

வசம்பு
வெற்றிலைக்காம்பு

இது ஆறும் சமன் கூட்டி வேப்பெண்ணெயில் கொதிப்பித்து காதிலே குத்தி அடைக்கத்தீரும்.

**வேறு**

ஆடாதோடை இலை இருபது கொண்டுவந்து வறுத்து அதிலே இரண்டு காசெடை நற்சீரகம் அரைத்துக் கரைத்து இரண்டு காசெடை முலைப்பாலில் கூட்டிக் கொடுக்கவும். இந்தப் படிக்கி பிள்ளைக்கித் தக்கதாக மருந்து சமன் கொடுக்க கூட்டி மூன்று நாளில் அந்த வெளுப்பு தீரும்

**பிள்ளைகளுக்குக் காதிலே சீழ் ஓடினால் அதுக்கு மருந்து:**

பொரி ஆரையும்
நற்சீரகமும்

ஈரவெங்காயமும் நறுக்கி முலைப்பாலில் கலந்து கட்டவும். அல்லது மன்னிவேர் சமூலமும், நற்சீரகமும், ஈரவெங்காயம் வசம்பு நறுக்கி முலைப்பாலில் சாறு கொண்டு புகட்டவும்.

**நெய் வகை மருந்து:**

நாவல் கொழுந்து
துவரைக் கொழுந்து
துடறிக் கொழுந்து
நற்சீரகம்
சத்தைமிளகு
வெள்ள வெங்காயம்
வசம்பு
நாயுருவி வேர்
ஈரவெங்காயம்

அது சமன் கூட்டி பசுவின் நெய்யில் வேகவைத்து உள்ளுக்கும் கொடுத்து தலையிலும், தேய்க்கவும். சுழிகணமானால் தீரும்.

**இருமலுக்கு**

தூதுவளை இலை, கண்டங்கத்திரி இலை, கையான்தகரை, செம்முள்ளி, இலை, திப்பிலி பொடி செய்து சாத்திலே மத்திச்சுப் போடவும். இருமல் நிற்கும்.

**பிள்ளைகளுக்குப் பொருமலும், வெதுப்புக்கும் மருந்து:**

உத்தாமணி இலை
தகரை இலை
நல்ல பீர்க்கி இலை

ஒவ்வொரு பிடியும் அத்திப் பழுப்பு, அஞ்சு, சாளுக்கி இலை, நாலு இதைக் கசக்கிச் சாறு கொண்டு வசம்பு மூணு மிளகும் வெள்ளைப்பூண்டு, அசமதாகமும் ஆமையோடு இதுகள் வறுத்து அரைத்துப் போடவும்.

**பிள்ளைக்கி மாந்த சுரத்துக்கு:**

ஆத்துமுள்ளி வேர்
குமினிவேர்
சித்தாமணக்குவேர்
கோழியாவாரை வேர்
உத்தாமணி வேர்

இந்த அஞ்சு வேரும் சமன்கூட்டி வசம்பு கூட்டி இடித்துத்தூள் செய்து, மூன்று விரல் கொண்ட தூள் போட்டு ஈர

வெங்காயமும் அரிந்து போட்டு, விளக்கெண்ணெயில் கொதிப்பித்துப் பதத்தில் இறக்கி உள்ளே கொடுக்கவும்.

**முலைப்பால் சுரக்க மருந்து:**

கழஞ்சி, திப்பிலி அரைத்துப் பசுவின் பாலில் மூன்று நாள் குடிக்க முலைப்பால் சுரக்கும். மாடப்புறா எச்சமும், கோழி எச்சமும் நீரிலரைத்து முலையில் பூச முலைப்பால் சுரக்கும்.

**சிறு பிள்ளைக்கு வயிறு கழிச்சல் நிற்க:**

வெள்ளைப்பூண்டு 1, சீரகம் 13, காசெடை மாவயிரம் இந்த மூன்று மருந்தும் முலைப்பாலில் அரைத்து மூன்று பொழுது கொடுக்க கழிச்சல் நிற்கும்.

**அக்கர காய்ச்சலுகு**

வாயுதடுயும் நாக்கு அனலாயிருக்கும், பிடரியும் முதுகெலும்பும், கடுக்கும், காதிலே அனலா எரியும். ஈரலும் எரியும்.

**அதுக்கு மருந்து:**

பிரண்டை இலை, காஞ்சொரி இலை, குறிஞ்சி இலை, குறிஞ்சி இலை பட்டை, ஈர வெங்காயம் 1, வசம்பு 1, விளக்கெண்ணெய் உழக்கும் மருந்து நறிக்கினது எலுமிச்சங்காய் அளவு எண்ணெயில் போட்டு பதத்தால் வடித்துக் கொண்டு காய்ச்சதனை எண்ணெய் உச்சியிலும் கரத்திலும், முகத்திலும், சின்ன பிள்ளைக்கி அதுக்குத் தகுந்தவாறு எண்ணெயும் கொடுக்கவும்.

**பிள்ளை உதைக்கி மருந்து:**

செங்கத்தாரிப்பட்டை, தட்டி வந்து வெள்ள வெங்காயமும், வெற்றிலையும் கூட மென்று உச்சி, தொண்டைகுழி, மூக்கு, வாய், சந்து இதுகளில் ஒவ்வொரு தானத்தில் நான்கு தடவை தினம் ஆறு தடவை தடவவும். அந்தமென்ற சாத்திலே இரண்டு துளி வாயில் விழுக்காட்டவும். சகல பிணியுந் தீரும். கைகண்டது.

**பிள்ளைக்குக் கடுப்புக் கழிச்சலுக்கு மருந்து:**

அம்மான் பச்சரிசியும், கீழாநெல்லியும், சமன்கூட்டி அரைத்து முலைப்பாலில் கொடுக்க நிற்கும்.

**வேறு**

மிளகு ஒரு பிடியும். வெள்ளை வெங்காயமும், அஞ்சு பூண்டும், நாலு வசம்பு நிலவாகை வேரிழைத்த பொடியில் உரிய பொடியும், செம்முள்ளியின் விழுது ஒரு பாக்களவும், முக்காபடி நல்லெண்ணெயில் கொதிக்க வைத்து பதத்திலிறக்கிக் கொண்டு உள்ளுக்கு ஒரு துட்டளவு சிலந்தி மேலும் உலர உலரப் பூசி வரவும். கடிகையும், விப்புருதியும் தீரும்.

**இதுக்குப் பத்தியம்:**

உப்புப்புளி, கசப்புத் தவிரவும், முருங்கையிலை இளங்கீரை, துவரம் பருப்பு, கூட்டிக் கொள்ளவும்.

**வேறு**

நீர்க்கடுப்புக்கு தேத்தாவிரைத் தின்ன நிற்கும்.

**பெரும்பாட்டுக்கு:**

நிலவாகைச்சுரசம், மிளகு 5 பலம், ஒரு கைப்பிடி அகல கம்பளியில் கட்டி, சட்டியிலிட்டு எரியவிட்டு கம்பளி உருகுகிற போது கடையவும். வெல்லம் போட்டு லேகியம் பண்ணிக் கொடுக்கவும்.

**நிலவாகைச்சூரணம்:**

நிலவாகை நிழலில் உலர்த்தித் தூளாக்கி வைத்துக்கொண்டு சுரைப்பழுப்புச் சாத்தில் கொடுக்கவும். வயிற்று வலிக்கு குப்பை மேனிச் சாத்தில் கொடுக்கவும். நல்ல பாம்புக்கு, விரியனுக்குச் சாரணைச் சாற்றில் கொடுக்கவும்.

**எலிகடிகுணம் மருந்து:**

மாவுத்து என்னும் எலி கடித்தால் எப்போதும் போலே உள் வெதுப்பும், தலை சுளத்திலும் வீங்கும். வாய் நாறும்.

**இதுக்கு மருந்து:**

வாகைதோலும், வாகை விரையும், தேனிலரைத்துக் கொடுக்கத் தீரும்.

உதர மண்டலி, என்னும் எலி கடித்தால் நீர் உதிரம் போலிருக்கும். கடிவாய் வட்டம் போலிருக்கும்.

**இதற்கு மருந்து:**

மஞ்சட்டியம் பற்பாடகமும் பொடி செய்து தேனில் குழைத்துக் கொடுக்கத் தீரும்.

அருகா என்னும் எலி கடித்தால் உடம்பு தடிப்புண்டாகும். ஈளை இருமலுண்டாகும். முத்தக்காசு பொடி செய்து தேனில் குழப்பிக் கொடுக்கத் தீரும். சூலகனென்னும் எலி கடித்தால் குளுந்து நடுங்கும்.

**இதற்கு மருந்து:**

செஞ்சந்தனம் திப்பிலிப்பொடி செய்து தேனில் குழப்பிக் கொடுக்கத் தீரும்.

மந்திரி எலி கடித்தால் தினவு தின்னும். பூனை, கறணை வேரும், கரவளை வேரும் பொடி செய்து தேனில் குழப்பிக் கொடுக்கத் தீரும்.

முத்தய்யன் எலி கடித்தால் உடம்பெரிக்கும். வெதுப்புண்டாம், பாவட்டை இலை, ஊமத்தை இலை, மாடப்புறா எச்சம் அரைத்து கண்ணிலிடவும்.

விக்கன் எலி கடித்தால் உடம்பெல்லாம் ஓடவகைக்குப் பல விகாரமாம். செவிகேளாது. இதுக்குக் கடுகுரோகிணி, கருவாழைப் பழம், கண்டங் கத்தரிக்காய் தின்னத் தீரும். எலிகடிக்கு நெல்லிப் பட்டைத் தைலம் 4, இருநாழித் தண்ணீர் விட்டுக் காய்ச்சி நல்லெண்ணெய் விட்டுக் கொள்ள கடிதீரும். எலிகடிக்கி கருணைக் கிழங்குத் தூளும் குறுவை அரிசியுடன், வெ ள்ளாட்டுப் பாலில் சமைத்து உண்ண எலி கடி தீரும்.

**நிலவாகைக் கற்பம்:**

நிலவாகைச் சமூலமும், உடனே பிடுங்கி உலர்த்திப் பொடி செய்து, வெருகடிப் பிரமாணம் தேனில் கொள்ள உடம்பு மெலியும். நெய்யில் கொள்ள மெத்தக் காந்தியாம். இளவென்னீரில் கொள்ள திமிரிப்புக்கு விழும். நல்லெண்ணெயில் கொள்ள எலிகடி தீரும். சிறு விஷக்கடித் தீரும். எரி கிரந்தி தீரும். மோரில் குடிக்கச் செருமல் தீரும். கோமியத்தில் குடிக்க அளகுட்டந் தீரும். இவை சமன் கூட்டி இந்தச் சாறு விட்டரைத்து,

| | |
|---|---|
| நல்லெண்ணெய் | படி 3/4 |
| வேப்பெண்ணெய் | படி 3/4 |
| புங்கெண்ணெய் | படி 3/4 |
| குருந்த எண்ணெய் | படி 3/4 |

ஊமத்த இலைச்சாறு இவை கூட்டி எரித்து வடித்துக் காப்புக் கட்டி வினாயக பூசை பண்ணிப் பூசி வேது வார்த்துக் கொள்ள வாதம் தீரும்.

வற்பங்கனென்னும் எலி கடித்தால் உடம்பு வீங்கும். கண் சிவந்து இருக்கும். சிறுக்கீரை வேர் தேனில் கொடுக்கத் தீரும். திருவடி என்னும் எலி கடித்தால் உடம்பு வீங்கும். வெதுவெதுப்பும், புன்முருங்கையின் பொடி செய்து தேனில் குழைத்துக் கொடுக்கவும்.

**எரிகுன்மத்துக்கு:**

வேப்பெண்ணெய்படி 4, நல்லெண்ணெய் படி 4, கவுதும்பைச் சாறு, பசுவின் பால் படி 3, ஏலம், அதிமதுரம், செங்களநீர், கோஷ்டம், செம்பகப்பூ இவை சமன்கூட்டி பால் விட்டரைத்து, எண்ணெய், சட்டியில் விட்டு தண்ணீர் அதுக்கு நீர் , பால் , நல்லெண்ணெய், நெய் படி இந்தச் சாறு விட்டு, நாளொன்றுக்குக் கூட்டி எரித்து வடித்து கொள்ள எரிகுன்மம் தீரும்.

**பெரும்பாட்டுக்கு:**

நாவிலைக் கொழுந்தும், வரகரிசியும், அரைத்துக் களி கிண்டித் தின்னவும். எண்ணெய் விட்டுத் தின்னவும். சுண்ணாம்பும், எலுமிச்சம் பழச்சாறும், நல்ல எண்ணெய் கருப்புக் கட்டி கூட்டித் தின்னவும். பெரும்பாடும் தீரும்.

**நஞ்சுக்கு மாத்து:**

பருத்தி விதை துவைத்து, பாலில் குடிக்க பதினெட்டு நஞ்சு தீரும்.

**ஆட்டுப் படுவனுக்கும், எலிப்படுவனுக்கும்:**

வேலிப்பருத்தி வேர் இரண்டு கொட்டைப் பாக்களவு அரைத்து உரிய பச்சரிசியில் போட்டு பால் வார்த்து பொங்கி மூன்று நாள் கொடுத்து ஏழுநாள் பத்தியம் காக்கவும். பிரண்டைச்சாறும் நல்லெண்ணெயும் கலந்து ஒரு கரண்டி போதக் கொடுக்கவும்.

**வண்டுகடிக்கு:**

வண்டு கடிக்குச் சாரணை வேரை பசுவின் பாலில் அரைத்துக் கலந்து கொடுக்கத் தீரும்.

**பேய்நரிக்கடிக்கி:**

வடக்கே போகிற அழிஞ்சில் வேரை வெட்டி வந்து கொட்டைப் பாக்களவு அரைத்து வெள்ளாட்டுப் பாலில் கொடுக்கவும். மூன்று நாளைக்குக் கொடுக்கவும். பேய்நரிக் கடி தீரும். உப்புப்புளி ஆகாது. மீறினால் குப்பைமேனி இலைச்சாறு நசியம் விடவும்.

**நஞ்சுக்கு மாத்து வகை:**

அரளிக்கு கடுக்காய்த் தண்ணீர், கார்த்திகைக் கிழங்குக் கடுக்காய்ப் பச்சை, நாவிக்கு மிளகுத் தண்ணீரில் கடுக்காய் அரைத்துக் கொடுக்கவும். வெள்ளை பாசாணத்துக்கு குட்டித் தக்காளிச் சாறு உள்ளுக்குக் கொடுக்கவும். கள்ளிப் பாலுக்கு கரணைப் பொடியும் சாறுங் கொடுக்கவும். குண்டுமணி தின்றால் கரணைப் பொடியும், மஞ்சள் பொடியும் அறுகுச் சாற்றில் கொடுக்கவும். எருக்கம் பால் குடித்தால் மோர் கொடுக்கவும்.

**நிலவாகைச் சூரணம்:**

நிலவாகைச் சமூலமும் பிடிங்கி நிழலில் உலர்த்தி இடித்துத் தூளாக்கி வடிகட்டி புதுக் கலசத்தில் அடைத்துக் கொண்டு தேனில்கொள்ள மெலியும். நெய்யில் கொள்ள பருக்கும். வெண்ணெயில் கொள்ள கீரைப் பாம்பு தீரும். மோரில் கொள்ள செரியாத்துன்பம் தீரும். கோமூத்திரத்தில் குடிக்க சிரங்கு தீரும். ஆட்டுக் கோமூத்திரத்தில் குடிக்க சிரங்கு தீரும். ஆட்டுக் கோமியத்தில் குடிக்க அழகு போம். எருமை மோருடன் குடிக்க எலி கடி தீரும்.

எருமைச்சாணாகம் பிழிந்து குடிக்க பித்தகாசம் போகும். எருமைப் பாலில் குழைத்து விழுங்க விஷக்கடி தீரும். குப்பை மேனிச் சாற்றில் குழைத்துப் பூச தேளுக்கடி மீளும். வேப்பம் பட்டைச் சாத்தில் குடிக்கவும்.

**எலிகடிக்கு மருந்து:**

அமலென்னும் எலி கடித்தால் செய்யுங் குணம் உடல்வெதும்பும். அழுகி விழும். இதுக்கு மருந்து செங்களுநீர்க் கிழங்கை அரைத்துப் பாலும் தவசி முருங்கைச் சாறும் கூட்டிக் கொடுக்கவும்.

**விரியன் கடிக்கி:**

பேய்க்கொம்மட்டிக்காய் பத்துக்காயைக் கீறி உப்புக் கீழும் மேலும் வைத்து ஊற வைத்து உப்புச் சாந்ததின் பிறகு காய வைத்துக் கொள்ளவும். விரியன் கடித்ததினால் ஒரு பணவிடை அரைத்து இளவென்னீரில் கொடுக்க பேதியாகி விஷமும் தீரும். குறிச்சுப் போட்டு, சோறும் கொடுக்கவும். மறிபடும் வீக்கம் வாடும். சத்தே வீக்கம் இருந்தால் மேற்படி கொடியும் துவைத்து துவாலை போடவும். மூன்று நாளைக்கி போட வீக்கம் வாடும். ஆறு நாளைக்கு புளி புகையிலை

ஆகாது. வயிற்று வலி எடுத்தால் காட்டுக் கருணைக் கிழங்கு அரைத்து விளவங்காய் அளவும். வேப்பெண்ணெய் கூடப் போட்டுக் கலந்து கொடுக்கவும். வயிற்று வலி நிற்கும்.

**சகல விஷத்துக்கு:**

அவுரி வேரை அரைத்து இளவெந்நீரில் குடிக்கவும். பாம்பு விஷம் தீரும். புத்தடிவீரியனுக்கு வில்லை வேரை அரைத்து இளவெந்நீரில் கொடுக்கத் தீரும். புல் வீரியனுக்கு குறுஞ்சாவேரை அரைத்து இளவெந்நீரில் கொடுக்கத் தீரும். மேலும் பூசவும்.

**கண்ட கருவளைக்கு:**

வேப்பம் விரை அரைத்து இளவெந்நீரில் கொடுக்கவும். மேலும் பூசவும்.

**மண்ணுளிக்கு:**

சுண்ணாம்பு கரைத்துத் தெளிய வைத்து இறுத்து கொடுக்கவும். மண்டியை பூசவும்.

புடையனுக்குப் பொன் முசுட்டை வேர் இளவெந்நீரில் அரைத்துக் கொடுத்துப் பூசவும்.

எரிமண்டலிக்கு நீர் பூலாவேர் பச்சைத் தண்ணியிலே அரைத்துக் கொடுத்துப் பூசவும்.

சீத மண்டலிக்கு வறப்பூலா வேரை அரைத்துக் கொடுத்துப் பூசவும். உதிர மண்டலிக்கு குமிளிவேரை அரைத்துக் கொடுத்துப் பூசவும்.

கொம்பேறி மூக்கன் கடிக்கு தலை சுருளி வேர் குடித்துப் பூசவும்.

**மயக்குறாவுக்கு:**

முள்பிடாவேர் குடித்துப் பூசவும். சாணாங்கி மூக்கனுக்கு அனாவேர் குடித்துப் பூசவும். ஊது சுருட்டைக்கிக் கைக் கொடி வேர் குடித்துப் பூசவும்.

நெஞ்சுருட்டைக்கி கோழி அவரை வேர் குடித்துப் பூசவும். சகல பாம்புக்கும், பாவட்டை வேரை அரைத்து இளவென்னீரில் கொடுக்கவும். பதினெட்டு பாம்பு விஷம் தீரும். எலுமிச்சம் வேர் இளவென்னீரில் கொடுக்கத் தீரும். இந்த மூன்று வேரும் குடித்துப் பூச, 18 விஷமும் தீரும். நசியம் முருங்கை இலை, பாக இலை, வெற்றிலை, வசம்பு, மிளகு, வெங்காயம், நறுக்கி நசியம் விட சகல விஷமுந் தீரும்.

சீந்தி விரை, மகிழவிரை, மிளகு, இலுப்பைப் பிண்ணாக்கு முலைப்பாலில் விட்டு, அரைத்துக் கயறு பண்ணி முலைப்பாலிட சகல விஷமுந் தீரும்.

செய்யானுக்கு ஆத்தியிலை அரைத்து, கொடுக்க விஷம் தீரும். குண்டுமணி இலை அரைத்துப் பூசவுந் தீரும். சிறு செய்யான் கடிக்கி அகத்தி இலையை துவைத்துச் சாறு குடிக்கவும்.

**நஞ்சுக்கு மாத்து:**

அழிஞ்சி இலைக்கும், அவுரி இலைக்கும் கடுக்காய் அரைத்து வெண்ணெயில் மத்திச்சுக் கொடுக்கவும். கார்த்திகை கிழங்குக்கு சுக்கை அரைத்து வெண்ணெயில் கொடுக்கவும். சேங்கொட்டைக்கு பொரசம் பழுப்பு பிழிந்து கொடுக்கவும். எட்டி விரைக்கி நாவல் பட்டை நல்லெண்ணெயுடன்

கொடுக்கவும். கற்பூரம் குடித்தால் கையாந்தகரைக் கொடுக்கவும். எருக்கம் பாலுக்கு அவுரி இலை, ஊமத்தை இலைக்கு பசரியானது தாமரை இலை கழுநீரில் கொடுக்கவும். சிவதை வேருக்கு வேலாம்பட்டை, பச்சை நாவிக்கு சிறு கீரை, கொடுவேலி, சிறுகீரை, கழுதை வண்டுக்கு மிளகும், மஞ்சள் உப்பு, இதுக்குத் தேத்தான் விரையும் மோரும், நறுவிளையிலைக்கும், பேய்பீர்க்கும் முத்தக்காசு, பேய்கொமட்டி, நெல்லுவேர், நல்லெண்ணெய்க்கும், இலாமிச்ச வேர், ஊமத்த விரைக்கு எலுமிச்சம்பழம் இதுக்கெல்லாம் அனுபானம் பசுவின் வெண்ணெயாவது பாலாவது சர்க்கரையாவது கூட்டிக் கொள்ளவும்.

நேர்வாளக் கொட்டை, உரித்துப் பருப்பு எடுத்துக் கொண்டு பேய்க் கொமட்டிப் பழத்தில் ஊறவைத்து ரசத்தை வெற்றிலைச் சாறு விட்டு முறித்து அதிலே விட்டு அரைத்து மாட்டுக்கொம்புச்சிமிழில் வைத்துக் கொண்டு அந்த மையை வெற்றிலையில் அரை பண வெடை வைத்து உள்ளுக்குக் கொடுக்கவும். தீரும். நல்ல பாம்பு, விரியனியெந்த விஷத்துக்கும், கண்கண்ட விஷத்துக்கும், பீனிசத்துக்கு கத்திரி உசிதம். கொடுக்கவும் தீரும்.

பீனிசத்திற்கு சூத்திரி உசிதம்

திரிபகை
பெருமருந்து வேர்
பேய்முசுட்டை வேர்
எருக்கிலை மஞ்சள்
சுக்கு
திப்பிலி
முசல் புழுக்கை
மிளகு
வல்லாரை

பொன்னாங்காணி
துளசி, பிரமி

ஆக வகைக்கு படி அரைக்காலாக பிழிந்து மெழுகு பதத்தில் வடித்துக் கொண்டு குழந்தைகளுக்கு ஒரு கரண்டியாகக் கொடுத்து வரவும். அதுக்கு இரண்டு தடவலாகக் கொடுத்து வரவும்.

**தீரும் வியாதி:**

கணை 18, வயிற்று வலி, கணம் 10க்கும், வலிப்பு, பக்க வாதம் கைகால் குடைச்சல் ஆக இவ்வளவு வியாதி தீரும்.

**கணைக்கு:**

கீழ்க்காய்நெல்லி ஒரு பிடி
கருவேலம்பட்டை ஒரு பிடி
வெங்காயம் ஒரு பிடி

ஆக சாறு படி 4இல் விளக்கெண்ணெய் விட்டுக் காய்ச்சி ஒரு கரண்டியாகக் கொடுக்கவும்.

**குழந்தைக்கு பேதி நிற்க:**

புளியாரையும், வாழைப்பூவும் ஒன்றாய்ச் சேர்த்து, புட்டவியலாக அவித்துப் பிழிந்து தேன் ஊற்றிக் கொடுக்கவும். பேதி நிற்கும்.

**பிள்ளைகட்கும், குழந்தைகட்கும் மாதளை நெய்:**

மாதளைச் சமூலமும், அமுர்த சர்க்கரைச் சேர்த்து, இடித்துக் குழம்பதாக்கி ஆவின் வெண்ணெய் கூடச் சேர்த்து, சாதிக்காய், பத்திரி, ஏலரிசி ஆகப் பொடித்துப் போட்டுக்

கிண்டிக் காய்ச்சி மெழுகுப் பதத்திலிறக்கிக் கொண்டு பூசை செய்து வைத்துக்கொண்டு பிள்ளைகட்குக் கரண்டி வீதம் கொடுக்கவும்.

**தீரும் வியாதிக்கு விபரம்:**

கணை 18, தோஷம் போகும். வயிற்றிரைச்சல் சலக்கழிச்சல் தீரும்.

**பிள்ளைகளுக்கு துட்டெண்ணெய்:**

மிளகு, சுக்கு, திப்பிலி
ஓமம், காயம், மஞ்சள்
வசம்பு, பூண்டு, அரத்தை

ஆக இவ்வளவும் வகைக்குப்படி சேர்த்துத் தட்டி தூள் பண்ணி வைத்து, கொக்கு வேப்பெண்ணெய் படி 18,ல் மேற்படி பொடியைப் போட்டுக் கிண்டி வேலிப்பருத்தி வேர், கொளுஞ்சி வேர், தைவேளை வேர்.

நிலவேர் சமனெடையாகச் சேர்த்துத் தட்டி மேற்படி எண்ணெயில் போட்டுக் காய்ச்சிப் பதத்தில் இறக்கிவைத்துக்கொண்டு, பிள்ளைகளுக்கு (1/2) யாகவும், சிறு பிள்ளைகளுக்குக் குறைத்தும் கொடுக்கவும். பத்தியம் புளி ஆகாது.

**குழந்தை மாந்தத்துக்கும், பொதுமலுக்கும் துட்டெண்ணெய்:**

வசம்பு
சுக்கு
மிளகு
திப்பிலி

மஞ்சள்

வேப்பம்பட்டை

முருங்கைப்பட்டை

சாரணைவேர்

தைவேளைவேர்

கொழுஞ்சி வேர்

வெள்ளாட்டுத்தோல்

ஓர் நிறையாக தூள் செய்து, வேலிப்பருத்திச் சாற்றை சீலையிலூட்டி, காயவைத்து, முன்மருந்தை இடித்துத் தூள் பண்ணி திரித்துருட்டி கருதில் கோர்த்து விளக்கெண்ணெய் விட்டு சுடர் மூன்று வடித்து வைத்துக்கொண்டு அரைதுட்டிடைக் கொடுக்கவும்.

**பிரளி, காங்கை, உள்வாஞ்சை, எலும்புருக்கிக்கு:**

வடக்கே போகிற அத்திவேரில் வெட்டி அதின்கீழ் புதுக்கலசம் வைத்தால் செலம் இறங்கும். அதை எடுத்துவைத்துக் கொண்டு தினசரி காலை, மாலை ஆக சாப்பிட்டு வரவும்.

**அண்டவாதம்:**

மஞங்காரம் பட்டையைத் தட்டி, சிறுநீர்விட்டு வறுத்து விதையில்மூன்று நாள் கட்டவும் தீரும். உள்ளுக்கு முருங்கைப் பட்டையைத் தட்டிப் பிழிந்து இரண்டு காசிடை உள்ளுக்குக் கொடுக்கவுந்தீரும். நாயுருவிச்சமூலம், காத்தொட்டி வேர் பலம் 1, மிளகு, வெங்காயம் ஆக அரைத்துச் சாப்பிடத்தீரும்.

**சாறணைச் சூரணம்:**

சாறணை வேர் பலம் 2, வில்லையாய் நறுக்கி வெள்ளாட்டுப் பாலிலூட்டி வெதும்ப வைத்து துணி நிழலுணர்த்திச் சூரணம் செய்து திப்பிலி பொடி பலம் 6 சேர்த்து இஞ்சி சாறு விட்டு குழம்பாக்கி சீனி பலம் 1, சேர்த்து தினசரி சாப்பிட்டுவர தீரும்.

**வியாதிக்கு விபரம்:**

வாய்வு, குன்மம், மேகம், சூலை, வாதம், பொருத்து குத்துளைச்சல் பாண்டும் தீரும்.

**பேதிக்கு எண்ணெய்:**

முசுட்டைத்தண்டு
கத்தாளஞ்சருகு
பிரமி
நிலவாகை
கடுக்காய்
களிப்பாக்கு
கடுகுரோகிணி

வகைக்குப் பலம் 1/2 , படி 2ல், தண்ணீர் விட்டு, சிறிதாக வத்தவைத்து 1/4 மாகாணி விளக்கெண்ணெய் விட்டுக் கொடுக்கவும். வெள்ளைக் குந்துருக்கங் கொண்டு வந்து சதிரக் கள்ளியில் குடைந்து 15 நாள் வைத்தெடுத்து அரளிப் பூப்பந்து கட்டி மேற்படி மருந்தை நுனிக்கி நெருப்பில் தூவி மேற்படி பந்தை புகையின் மேல் பிடித்து வைத்துக்கொண்டு முகர்ந்து பார்த்தால் பேதியாகும். பேதிஅதிகமாக வேணுமானால் அதிக முகந்தால் அதிகம் பேதி. கொஞ்சம் முகந்தால் கொஞ்சம் பேதியாகும்.

**சுக பேதிக்கு:**

புரசன் விதையை குடத்தின் கீழ் சகதியில் புதைத்து வைத்து 90 நாளுக்கு மேலெடுத்து உள்முளை போக்கி பசுவின் பாலில் அரைத்துக் காலமே சாப்பிடவும். பேதியாகும். கிருமி விழும். மேகந்தீரும். அதிகப் பேதி கண்டால் உப்புப்போட்டு சாப்பிடவும். பத்தியம் புளி, புகையிலை தள்ளவும்.

**கிருமிக்கு:**

கொன்றைக் கொழுந்தை உப்பில்லாது அவித்துண்ண மறுநாள் கிருமியெல்லாம் கூட்டோடே விழும்.

**திருவளையடைத்தான்:**

சாதிக்காய், பத்திரி
அதிவிடையம்
குரோசாணி ஓமம்
சன்னயிலவங்கப்பட்டை
மாயக்கா

வகைக்கு விராகன் 3, முலைப்பாலில் ஊறப்போட்டு வறுத்துச் சூரணஞ் செய்து கொண்டு அந்த எடைக்கு பூனாகச் சூரணஞ் செய்து முன் சூரணத்தில் சேர்த்து வெருகடிச் சூரணமும் அதில் பாதிச் சீனியும் உடனுக்குடனே கலந்து சாப்பிடவும். 5 நாள் பொழுது சாப்பிடவும். புளி, புகையிலைத் தள்ளவும். அபானத்தைச் சேர்ந்த உஷ்ணவாயு, கிராணி, அதிசார வாய்வு, வெம்பு உஷ்ணம், அன்னத்துவேசம், வாய்வுந் தீரும். அதனால் வரும் சுரதாபமுந் தீரும். கள்ளு அரக்கு உண்டோர்க்கு இம் மருந்து ஏற்காது.

**சோகை பாண்டு:**

நீர்முள்ளி இலையை அவித்து மஞ்சள், உள்ளி, கடுகு அவித்த தண்ணீர் விட்டரைத்து மேற்படி கீரையில் கலக்கி

கடைந்து மெழுகுப் பதத்தில் கிண்டி இந்தப் படி ஏழு பொழுது செய்து சாப்பிடவும். புளி, புகையிலைத் தவிர்க்கவும்.

**சோகைக்கு:**

மாவிலங்கை குலையை கை தவளையில் துட்டு அகலத்தில் தட்டிவைத்து அதில் தூத்துக்குடி சல்லி வைத்துக் கட்டி அவிழ்த்து நல்லெண்ணெய் போட்டால், புண்ணும், மஞ்சள் காரம் போட்டு ஆக்கிக் கொள்ளவும். பூருவபட்சத்துக்கு வலது கையும் அமரபட்சத்துக்கு இடது கையும் கட்டத்தீரும்.

நீர்முள்ளி, நாயுருவி, பனங்கதிர், புளியந்தோடு பலம் வீதம் சாம்பலெடுத்து வைத்துக்கொண்டு அஞ்சாகப் பகுத்து கண்டங்கத்திரி, பிறாயிலை, முள்ளியிலை ஆக வகை வீதம் போட்டுக்கிஷாயம் செய்திருத்து வைத்துக்கொண்டு பொகாரஞ் சுத்தி பண்ணி பொரிக்கு சுக்கு, மிளகு, பூண்டு விராகன் நேர்வாளஞ் சுத்தி பண்ணி முளைபோக்கி ஒரு போதைக்கு அரைபருப்புக் கூட்டி, அரைத்து ஓவருப்பு போட்டு விளக்கெண்ணெய் விட்டு கலக்கிக் கொடுக்கவும். பத்தியம் உப்பாகாது. தீரும்.

**கால், கை வீக்கத்துக்கு:**

கையான்தகரை
நெருஞ்சிவேர்
சங்கம்வேர்ப்பட்டை
நீர்முள்ளி இலை

இரண்டு பலம் மிளகு அரைப்பலம் பொட்டணமாக் கட்டி ஆறுபடி ஜலம் விட்டு, மருந்து போட்டு இரண்டு படியாக வத்தவைத்து நாள் ஒன்றுக்கு இரண்டு பொழுதாக மூன்று நாள் கொடுக்கவும்.

**சூரியவேர் கிராணிக்கு:**

சூரிவேர் அரைத்து ஆவின்பால் சேர்ததுக் கசக்கிச் சார் இட தீரும் வியாதி.

உடம்புக்கு வலு, பிசாசு விலகும், கிராணி, கழிச்சல், போகும். கொடுப்பைச் சமூலம் அரைத்து மிளகு, சீரகம் சேர்த்து அரைத்து 1/2 நறுநெருப்பில் வெந்திருத்துக் கொண்டு சாப்பிடத் தீரும்.

தீரும் வியாதி: மேகம், வெட்டை, சொரி சிரங்கு தீரும்.

**கால், கை வீக்கத்திற்கு:**

கையான்தகரை
நெருஞ்சிவேர்
சங்கம் வேர்ப்பட்டை
நீர்முள்ளி இலை

இரண்டு பலம் மிளகு அரைப்பலம் பொட்டணமாகக் கட்டி ஆறுபடி ஜலம் விட்டு, மருந்து போட்டு இரண்டு படியாக வத்த வைத்து நாள் ஒன்றுக்கு இரண்டு பொழுதாக மூன்று நாள் கொடுக்கவும்.

**சூரி வேர் கிராணிக்கு:**

சூரி வேர் அரைத்து ஆவின்பால் சேர்த்துக் கசக்கிச் சார் இட தீரும் வியாதி.

உடம்புக்கு வலு, பிசாசு விலகும், கிராணி, கழிச்சல் போகும்.

**கொடுப்பை, மேகம், வெட்டை, சிரங்கு:**

கொடுப்பைச் சமூலம் அரைத்து மிளகு சீரகம் சேர்த்து அரைத்து 12 சிறு நெய்யில் வெந்திருத்துக் கொண்டு சாப்பிடத் தீரும்.

தீரும் வியாதி: மேகம், வெட்டை, சொரி சிரங்கு தீரும்.

**வயிற்றளச்சல் கிராணிக்கு:**

வெள்நாகல் பட்டை நிழலுலர்த்தி சூரணித்து வைத்துக்கொண்டு வெள்ளாட்டுப் பாலில் வெருகடி போட்டு கொடுக்கவும் . தீரும்.

**கிராணிக்கு:**

மிளகு, கொடுவேலி வேர், வளகிலுப்பு
திப்பிலி, வசம்பு
நடுக்குமூலம், கடுகு
சிறுதேக்கு
வாய்விளங்கம்
ஓமம்
சுக்கு
நவச்சாரம்

ஆக வகைக்கு விராகன் 1, மேல்கண்ட நவச்சாரமும், வளகில் உப்பும், விராகன் 14, தாமரைக் கிழங்கு பலம் 5, இவ்வளவும் இளவறுப்பாக வறுத்து வஸ்திர காயம் செய்து எருமைத்தயிரிலாவது சுக்குக் கிஷாயத்திலாவது, இள வெண்ணீரிலாவது வெருகடிப்பிரமாணம் போட்டு 7 நாள் 14 பொழுது சாப்பிடவும். தீரும்.

**வயிற்றுளச்சலுக்கு:**

எலுமிச்சம்பழத்தைத் துளைத்து சாதிக்காயை வைத்து மேல் சாணி பொதித்து எருவில் புடம் போட்டு எடுத்து மேற்படி சாதிக்காயை பெரிய மனுஷாளுக்கு மூன்று பங்காகவும், பிள்ளைகளுக்கு நாலு பங்காகவும் பொடித்து எருமை வெண்ணெயில் சேர்த்துக் குடுக்கத் தீரும்.

**இருமலுக்கு எண்ணெய்:**

| | | |
|---|---|---|
| கஸ்தூரி மஞ்சள் | பலம் | 1 |
| கசகசா | பலம் | ½ |
| கோட்டம் | பலம் | ½ |
| மிளகு | பலம் | 1½ |
| சீரகம் | பலம் | 1½ |
| கையாந்தகரைச்சாறு | படி | 1 |
| கொடுப்பைச்சாறு | படி | 1 |
| கீழ்க்காய்நெல்லிச்சாறு | படி | 1 |
| மொசுமொசுக்கைச்சாறு | படி | 1 |
| நெல்லிக்காய்ச்சாறு | படி | 1 |
| செவ்விளநீர் | | |
| தண்ணீர் | படி | 1 |

மேற்படி சாறு படிகளில் மேற்படி மருந்துகளை அரைத்து மேற்படி சாற்றில் கலக்கி ஒரு பசி நல்லெண்ணெய் சேர்த்து, காய்ச்சி எண்ணெய்ப பருவத்தில் வடித்து மூழ்கி வர உத்தமம். மூழ்கின மறுநாள், குளிர்ந்த நீரில் குளிக்கவும். பத்தியம் மூழ்கின அன்று புளி புகையிலைத் தள்ளவும். உத்தமம்.

**தொண்டை புகைச்சல், இளைப்புக்கு:**

| | |
|---|---|
| திரிகடுகு | 3 வராகன் |
| அக்கரா | ,, |

| | |
|---|---|
| அரத்தை | ,, |
| வெள்ளைக்குந்துருக்கம் | ,, |
| நெல்பொரி | ,, |
| ஆடாதொடை | ,, |
| நெல்லித்தொக்கு | ,, |

தேன் கழஞ்சி 6, இதுவெல்லாம் கூட்டிக் குழம்பாக்கி அந்தி சந்தி வைத்து 10 நாள் சாப்பிடவும். தீரும்.

**இருமலுக்குக் கிருதம்:**

| | |
|---|---|
| பசுநெய் | படி |
| குட்டித்தக்காளி இலை | பிடி 1 |
| தூதுவளை இலை | பிடி 1 |
| கண்டங்கத்திரி இலை | பிடி 1 |

நெய்யில் போட்டுக் காய்ச்சி இலை வெந்த பருவத்தில் நெய்யை இறக்கும் பொழுது

| | | |
|---|---|---|
| மிளகு | விராகன் | 1 |
| திப்பிலி | ,, | 1 |
| சுக்கு | ,, | 1 |
| அகாரா | ,, | 1 |
| சித்தரத்தை | ,, | 1 |
| கடுக்காய் | ,, | 1 |
| அதிமதுரம் | ,, | 1 |
| மாதுளங் தோடு | ,, | 1 |
| கூகநீறு இலைவேரு | ,, | 1 |

ஆக இவ்வளவும் வகைக்கு விராகன் 1 வீதம் பச்சையாக நுணுக்கிக் கொள்ளவும். நிலவேரை வறுத்துப் பொடித்து பண்ணிக்கொண்டு மறுகலசத்தில் போட்டுநெய்யை வடித்து மேற்படி இலையை நன்றாக மத்தித்து

நெய்மருந்துடனே சேர்த்துக் கிண்டிவைத்துக் கொண்டு அந்திசந்தி அரை மாகாணி படி சாப்பிட்டு வரவும். வாய்வு பதார்த்தந் தள்ளி வைக்கவும்.

தீரும் வியாதி: ஈழை, இருமல், புகைச்சல் இளைப்பு முதலியன

**துரத்தலுக்கு இஞ்சிக் குழம்பு:**

| | |
|---|---|
| சுக்கு | அதிமதுரம் |
| மிளகு | மல்லி |
| திப்பிலி | வாய்விளங்கம் |
| நெல்லிக்காய் | இலவங்கம் |
| கடுக்காய் | சாதிப்பத்திரி |
| சீரகம் | தாளிசபத்திரி |
| கருஞ்சீரகம் | இலவங்கப்பத்திரி |
| நாகப்பூ | விழலரிசி |
| சந்தனக்கட்டை | வெட்பாலரிசி |
| கோட்டம் | செண்பகமொட்டு |
| பூலாங்கிழங்கு | மஞ்சள் |
| சாதிக்காய் | கடுகு |
| கிராம்பு | மகரப்பூ |
| சடாமாஞ்சி | தக்கோலம் |
| பரங்கிப்பட்டை | செவதை |
| மஞ்சள் | ஓமம் |
| கடுகு | மகரப்பூ |
| தக்கோலம் | சதகுப்பை |

47

ஆக வகைக்கு வராகன் 1 ஆகச் சேர்த்து இடித்து வஸ்திரகாயம் செய்து வைத்துக்கொண்டு இஞ்சி, பலம் 5 இடித்துச் சாறு எடுத்துக்கொண்டு சர்க்கரை பலம் 5, மேற்படி சாத்தில் கரைத்துப்பாகு செய்து மேற்படி பொடியைத்தூவிக் கிண்டி இறக்கி ½ படி விட்டு, கிளறி தேன் படி ¼ விட்டு கிளறி

வைத்துக்கொண்டு நெல்பதங்கம் வைத்துக்கொண்டு காலை, மாலை நெல்லிக்காயளவு சாப்பிடத் தீரும்.

**இருமலுக்குப் புகை:**

சாம்பிராணி
மஞ்சள்
சுக்கு
வால்மிளகு

சமனாகக் கூட்டி கவுதும்பைச் சாற்றில் அரைத்து வில்லை செய்து காயவைத்து ஒரு வில்லை எடுத்துக் பொடித்துப் புகைக் குடிக்கவும். மந்தார காசம் கணை முதல் புகைச்சலுந் தீரும். 3 நாள் குடிக்கவும். புளி, புகையிலைத் தள்ளவும்.

**யுனானி வைத்தியம்:**

செம்பருத்தம் பூ ஒரு சாடியில் ஒரு விரல் கணம் பரப்பி பனங்கற்கண்டு பொடி தூவி மேலும் பூவை பரப்பி அதின்மேல் பொடியை இப்படியாக நிரம்பும் வரைப் போட்டு வைத்துச் சூரிய புடமாக ஒரு வாரம் வைத்து எடுத்து, காலை, மாலை நெல்லிக்காயளவு சாப்பிடவும். சாப்பிடுகிறபோது பழைய சாதமும், நல்லெண்ணெயுமாகாது. அரை மண்டலம் சாப்பிடவும். பத்தியமில்லை.

**தீரும் நோய்கள்:**

மேகம், க்ஷயம், இருமல், குருதிக்குழற் அழற்சி முதலியவை குணமாகும்.

**பவுத்திரத்திற்கு:**

கார்த்திகைக் கிழங்கு உமிழ்நீரில் உரைத்துப் போடவும். பவுத்திரஞ் சகலமும் தீரும். மேற்படி மணிதங்கி இலையும், பச்சைக் கஞ்சா இலையும் வதக்கி நாலு நாள் கட்டத் தீரும். ஆவரைபிசுக்கொட்டுகிற கொழுந்தும் பூவும், எலுமிச்சங்காயளவு அரைத்து மாகாணி அரை மாகாணி படி நல்லெண்ணெயில் குழப்பி காலமே ஒரு போது உள்ளுக்கு மூன்று நாள் மூன்று பொழுது சாப்பிடவும் தீரும்.

**விஷம் , குட்டம், தீரும்:**

சங்கங்குப்பி இலைச்சாறு படி ¼ , ஈற வெங்காயம் பலம் 1, கூடச் சேர்த்து இடித்து பசுவின் பாலில் படி ¼, கலந்து 5 பொழுது சாப்பிடவும். பத்தியம் உப்பு ஆகாது. மறுபத்தியம் உப்பு வறுத்துக் கூட்டவும். ஒன்பதாம் நாள் ஓமம் அரைத்துக் கொதிக்க வைத்து முழுகவும். 11வது நாள் இசங்கி இலையும், மஞ்சளும் ஓமமும் அரைத்து நல்லெண்ணெயில் காய்ச்சி முழுகவும் தீரும்

**குட்டத்துக்கு:**

சந்தனம்
தேவதாரம்
கோட்டம்
கச்சோலம்
பூலாவிருச்சம்
கஸ்தூரி மஞ்சள்
கார்கோலரிசி

ஆக வகைக்கு நல்லெண்ணெய் படி 1, பால் படி 1, மேற்படி மருந்தை பால் விட்டரைத்து எண்ணெயில் கலக்கி

மெழுகு பதத்தில் வடித்துக்கொண்டு முழுகவும். குட்டம் 18 சூலையும் தீரும்.

**சிரங்கு முதல், சகல விஷம், சகல நீரும் தீரும்:**

முள்குறன்டி வேரை அரைத்துப் பசுவின் பாலில் கரைத்துச் சாப்பிடவும். இப்படி 3 நாள் சாப்பிடவும். உப்பாகாது. மறுபத்தியம் உப்பை வறுத்துக் கூட்டிக் கொள்ளவும். சிரங்கு, கரப்பான் விஷ நீர்களும் தீரும்.

**ஈழை, தேமல், தளுவத்துக்குச் சொரி சிரங்குச் சூரணம்:**

பொன்னாவாரை மூலம் நிழலுலர்த்திச் சூரணித்து வைத்துக்கொண்டு, தேனில் சேர்த்துச்சாப்பிடத் தீரும்.

**தலைக்குட்டத்துக்கு:**

வசம்பு, கிளுகிளுப்பை இரண்டையும் அரைத்து நல்லெண்ணெயில் கலக்கி மெழுகு பதத்தில் இறக்கி வைத்துக்கொண்டு தலைக்கிட்டு இலுப்பைப் புண்ணாக்கு தேய்த்து முழுகவும். தீரும்.

அஞ்சு ஊமத்தங்காயும், இரண்டு கழஞ்சி ரசம், அஞ்சு கழஞ்சி கெந்தகம் அரைத்து ஊமத்தங்காயை அறுத்து, கெந்தகத்தைச் செலுத்தி மேல்மூடி நார் கொண்டு சுத்தி கட்டிப் பசுவின் சாணி கொண்டு ஷை காயை பொதிந்து ஏழு எருவில் புடம் போட்டு எடுத்து அரைத்து ஷை ரசம் விட்டு, அரைத்து உருண்டை செய்து நிழலுலர்த்தி வைத்துக்கொண்டு பசுவின் வெண்ணெய், தேங்காய் எண்ணெய், நல்லெண்ணெய் இதில் ஏதாவது கூட ஷை உருண்டையைப் பொடி பண்ணி எண்ணெயில் போட்டு, ரேசித்து வைத்துக்கொண்டு புண்ணில் போடவும்.

**மேகத்துக்கு:**

பூனைக்கண் குந்துருக்கத்தை நன்றாய் நுனிக்கி, சிலந்தில் போட்டு, நல்லெண்ணெயும் கூட விட்டு, தயிர் மத்தாலே நன்றாய்க் கடைந்து எடுத்து வைத்துக் கொண்டு ஒரு பின்னைக்காயளவு உள்ளுக்குக் கொடுக்கவும். பத்தியம் புளித்தள்ளவும்.

**நீர்க்கடுப்பு, கல்லடைப்பு:**

| | | |
|---|---|---|
| ஏலம் | பலம் | 2 |
| சீரகம் | ,, | 2 |
| இருவேலிகொடுப்பை | ,, | 2 |
| அதிமதுரம் | ,, | 2 |
| ஆலம்விழுது | ,, | 2 |
| நுனாக்கொழுந்து | ,, | 2 |
| மிலாக்காச் சந்தனம் | ,, | 2 |
| மல்லி | ,, | 2 |

ஆக பசுவின் பாலில் அரைத்து ஷை பாலில் கலக்கிச் சாப்பிடவும். பத்தியம் புளியாகாது.

**மேக காங்கை, கபால வாய்வு, சொரி சிரங்குக்கு:**

| | | |
|---|---|---|
| கஸ்தூரி மஞ்சள் | பலம் | 1 |
| கருஞ்சீரகம் | ,, | 1 |
| மாயக்கா | ,, | 1 |
| ஏலம் | ,, | 1 |
| சந்தனம் | ,, | 1 |
| வால்மிளகு | ,, | 1 |
| கருஞ்சித்தக்கத்தி பூ | ,, | 5 |
| சாதிக்காய் | ,, | ½ |

| | | |
|---|---|---|
| எலுமிச்சம் பழச் சாறு | படி | ½ |
| கொடுப்பைச்சாறு | படி | ½ |
| கரிப்பான் சாறு | படி | ½ |

ஷெ சாறு விட்டு, கடை மருந்து அரைத்து நல்லெண்ணெய் படி 1½ விட்டுக் காய்ச்சிப் பதத்தில் இறக்கிக் கொண்டு கண பதி பூசை செய்து வைத்துக்கொண்டு முழுகவும். பத்தியம் புளி ஆகாது.

**ஆறாப்புண்ணுக்கு, மேக ஊறலுக்கு:**

| | | |
|---|---|---|
| விளக்கெண்ணெய் | படி | 1/8 |
| ஊமத்திச் சாறு | படி | 1/8 |
| துருசு விராகன் | | 1/8 |

பூனிக்கிப் போட்டு காய்ச்சிப் பதத்தில் இறக்கி வைத்துக் கொண்டு போடவும் தீரும்.

| | | |
|---|---|---|
| நிலவாகைப்பொடி | | 1/4 |
| சீரகம் | படி | 1/8 |
| கற்கடகசிங்கி | பலம் | 1/2 |
| பிஞ்சுக் கடுக்காய் | பலம் | 1/2 |
| இந்துப்பு விராகன் | பலம் | 1/2 |

கடைச்சரக்கை இளவறுப்பாக வறுத்து பொடி செய்து வைத்துக் கொண்டு சீனி பலம் 1, கூடக் கூட்டி சாப்பிட்டு வரவும். பத்தியம் இல்லை. சிரங்கு, கிருமி குட்டம் தீரும்.

**அருகன்வேர் கஷாயம்: (தாது புஷ்டி உண்டாம்)**

| | | |
|---|---|---|
| அருகன்வேர் | பலம் | 1 |
| மிளகு | | 108 |
| சீரகம் | பலம் | 3 |

ஆகவகை மூன்றும் தட்டி மூன்று படி ஜலம் விட்டு, கஷாயஞ் செய்து ¾ படியாக வத்தவச்சு ஆவின் வெண்ணெய் நெல்லிப் பிரமாணம் போட்டு சாப்பிடவும். வியாதி தீருகிற விபரம். உஷ்ண மேகம் போகும். கண் குளிரும். தாது புஷ்டி உண்டாகும்.

**பாரிச வாய்வுக்கு, புளு வெட்டுக்கு:**

சேங்கொட்டை தைலத்தை முதுகில் கைப்பட்டைக்குக் கீழ் இரண்டு புறமும் வட்டமாய் சன்னமாக கீறவும். புண்ணாகித் தீரும். களச்சி இலைச் சாரும், மிளகு கழச்சி 2, வெள்ளைப் பூண்டு 2, ஷி சாத்திலரைத்து தயிரில் கலக்கி சாப்பிடத் தீரும்.

எருமை வெண்ணெயும் எருக்கலம் பாலும் மத்தித்துத் தேய்க்க மயிர் முளைக்கும்.

**வாய்வுக்கு, வாய்வு வயிற்று வலிக்கு:**

இந்துப்பு
ஒட்டுப்பு
வளகிலுப்பு
கல்லுப்பு
உப்பு

ஆக உப்பு 5ம் வகைக்கு மேனிச்சார் விட்டரைத்து, குகை போலப் பண்ணிரசம் விராகன் (1), விட்டு, சட்டிக்குள் வைத்து, மேல் சட்டி மூடி சீலைமண் செய்து அடுப்பில் வைத்து, இரண்டு சாமம் கமலாக்கினியாக எரித்து இறக்கி ஆறவிட்டெடுத்து, சுக்குப் பொடி, வெறுகடி உப்பு, நாலு பணவிடை சேர்த்து சாப்பிடவும். பத்தியம் புளி ஆகாது. கல்லுப்பு, வெடி உப்பு, இந்துப்பு, வளகிலுப்பு, கரி உப்பு ஆக உப்பு ஐந்தும், கையாந்தகரைச் சாறு விட்டரைத்து வில்லைத் தட்டி காயவைத்து எருக்கினிலைப் பரப்பி அதன் மேல்

பிரண்டைப் பொடியைப் போட்டு மேலோடு மூடி மேல் எரு போட்டு புடம் போட்டு எடுத்துக்கொண்டு உதையம் சாயந்திரம் சாப்பிடவும் தீரும்.

**தீராத வயிற்று வலிக்கு:**

வேப்பிலையும், உப்பும் சட்டியில் போட்டு கருக்கி கொட்டிப் போட்டு, விளக்கெண்ணெய் ஒரு கரண்டி விட்டு இந்துப்பு ஒரு கழஞ்சி நுனிக்கிப் போட்டு இரண்டு ஈருள்ளி நொடிஞ்சு போட்டு, காய்ச்சி வடித்துப் போட்டு, படி நாள் மூன்று போது கொடுக்கவும். வயிற்று வலி தீரும்.

**பவுத்திரத்துக்கு:**

மேனியைச்சமூலம் நிழலுர்த்தலாக உலர்த்திச் சூரணஞ் செய்து ஒரு வெருகடிப் பிரமாணம் வெண்ணெயில் சேர்த்து ஒரு மண்டலஞ் சாப்பிடத் தீரும்

**சுரத்துக்குக் கஷாயம்:**

| | | |
|---|---|---|
| சுக்கு | விராகன் | 1 |
| மிளகு | ,, | 1 |
| சித்தரத்தை | ,, | 1 |
| நருக்குமூலம் | ,, | 1 |
| பேய்ப்புடல் | ,, | 1 |
| செவ்வியம் | ,, | 1 |
| சிறுதேக்கு | ,, | 1 |
| வாய்விளங்கம் | ,, | 1 |
| மல்லி | ,, | 1 |
| பற்படகபுல்லு | ,, | 1 |

ஆக கணுப்பூண்டு, வெதுப்படக்கி துளசி ஆக வகைக்குச் சமூலம் பலம் 3, சித்திரமூலம் விராகன் ½, கண்டங்கண்டமாக

நறுக்கி 3 படி தண்ணீர் விட்டு, அடுகுடினீயாகப் போட்டு, மூன்று பொழுது சாப்பிடவும். உப்பாகாது.

**நாலாமுறை சுரத்துக்கு:**

| | |
|---|---|
| *வெற்றிலை* | *3* |
| *மிளகு* | *10 அரைத்து உருட்டி* |

25 படி நொச்சியிலை இடித்து புட்டவியலுக்குள்ளே வைத்து வெந்து, மேல்படி மருந்தை எடுத்துக்கொண்டு பிழிந்து உள்ளே வைத்த மருந்தை கலக்கிச் சாப்பிடவும். சுரம் நிற்கும்.

**சுரத்துக்கு மந்திரம்**




இந்த சக்கரந் தியானித்து

**முசல் வலிக்கு:**

குக்கல் விட்டை சிறு தும்பையிலையும் கசக்கி கண்ணில் பிழியவும். நாயினுடைய விருப்பல்லும், கழுதைப்பாலும் அரைத்து மூன்று பொழுது கொடுக்கவும். தீரும்.

**தாது உண்டாக:**

சுக்கு
கிராம்பு
கசகசா
சாதிக்கா
முருங்கைப்பூ
கருப்புக்கட்டி
கஞ்சா

இவ்வளவும் பாலில் பொடித்துச்சாப்பிடவும். தாது உண்டாம்.

| | |
|---|---|
| முருங்கைப்பூ | 4 படி |
| பசுவின் பால் | 4 படி |

அடுப்பில் வைத்து தீ எரித்து முருங்கைப்பூ வெந்ததின் பேரில் பிசைந்து சக்கயைப் போட்டு

| | |
|---|---|
| சாதிக்காப்பத்திரி | 1 விராகன் |
| லவங்கம் | 1 விராகன் |
| லவங்கப்பட்டை | 1 விராகன் |
| குரோசாணி | 1 விராகன் |

கூட்டி சூரணஞ் செய்து வைத்துக் கொண்டு சர்க்கரை பலம் 5 போட்டு, பாகு செய்து மேற்படி சூரணப் பொடியைப் போட்டு லேகிய பதமாக்கி தேன் விட்டுக், கிண்டி வைத்துக் கொண்டு, இரண்டு நேரமுஞ் சாப்பிடவும். இந்திரியம் உண்டாகும். இச்சாப் பத்தியம்.

**திரேகத்தில் உதிரமுண்டாக:**

கோதுமை அரிசி குருணை படி 1 சட்டியில், பசுவின் பால் 1 படி தெளித்து துவாதுவாக கிண்டினதின் பிற்பாடு நெய் படி¾ விட்டு பிரளபிரளக் கிண்டி அதின்மேல் 1 படி பால்

விட்டு நன்றாக வெந்து வருகிற போது சீனி பலம் 5, போட்டுக் கிண்டி இறக்கி வைத்துக் கொண்டு உதையம் சாயந்திரம் ஒரு எலுமிச்சங்காயளவு சாப்பிட்டு வரவும். திரேக சவுக்கியம் உண்டாம்.

**மாலைக்கண்ணுக்கு:**

வெள்ளாட்டு ஈரலை வறுத்து, கருஞ் சீரகம் நுனுக்கி வைத்து சுட்டுத் திண்ணவும். தீரும்.

**துவாலை குட்ட மருந்து:**

அத்திப்பட்டை, ஆவாரம்பட்டை

துளசி ஆக 3ம் கஷாயம் பண்ணி 3 நாள் சாப்பிடவும் தீரும். அந்த மரம் முத்தின பட்டையை இடித்துக் கால்படி சாறு பிழிந்துகொண்டு, கம்பி பதமாகக் காய்ச்சி பக்குவத்தில் இறக்கி வைத்துக்கொண்டு 3 நாள் மேற்படி பாகப்படி செய்து சாப்பிடவும். தீரும்.

**கெற்பக, சூதக. வாய்வுக்கு:**

பெருங்குரும்பை
பேய்ப்பீர்க்கி
நிலவாகை

சமூலத்தோடே வத்திரகாயம் பண்ணிவைத்துக் கொண்டு சுக்குக் கிஷாயத்தில் வெருகடிப் பிரமாணம் பொடி போட்டு, சாப்பிடவும். நன்றாய் பேதியாகும். பேதி நிரம்ப எடுத்தால் உப்புப் போட்டுக் கஞ்சி குடிக்கவும். இப்படிக்கு 3 நாள் சாப்பிடவும். பூச்சிகள் எல்லாம் விழும். கெற்பமுண்டாகும்.

**முகத்தில் கறுப்பு மாற:**

கோஷ்டம்
வசம்பு
சந்தனம்
கோரோசனை
ஆலிலைப் பருப்பு

ஆக இவை பாலிலரைத்து முகத்தில் பூசவும். தீரும்.

**மருந்து:**

மஞ்சளைத் தோல் போக்கி வெள்ளைச் சாரணை வேரும், எருமைப்பாலிலரைத்து மேல் தேய்க்க கறுப்பு மாறும்.

**மருந்து: வேறு**

மஞ்சள்
சந்தனம்

எருமைப்பாலில் அரைத்து, மேல் தேய்க்க கறுப்பு மாறும்

**விக்கலுக்கு:**

இந்துப்பு
திப்பிலி

இரண்டையுந் தூள் பண்ணி தேன் விட்டுக் கிளறி தின்னத் தீரும்.

**வித்துத்தம்பனம்:**

ஓரிலைத்தாமரை வேர்
வேலி உத்தாமணி வேர்
முக்கரமலை தாங்கி வேர்

விளாங்காய் அளவு அரைத்து வெண்ணெயில் கலக்கி வேகவைத்து இறக்கி ஒரு காசிடை தண்டில் பூசவும்.விழாது.

**அட்டாதிச் சூரணம்:**

| | |
|---|---|
| சுக்கு | 3 கழஞ்சி |
| மிளகு | 3 ,, |
| தான்றிக்காய் | 3 ,, |
| திப்பிலி | 3 ,, |
| நெல்லிக்காய் | 3 ,, |
| கடுக்காய் | 3 ,, |
| காந்தம் | 3 ,, |
| ஓமம் | 3 ,, |
| கார்கோலரிசி | 3 ,, |
| காயம் | 3 ,, |

சீரகம் நேர்வாளஞ்சுத்தி பண்ணி வகைக்குக் கழஞ்சி ஆறாக சேர்த்து வைத்துக் கொண்டு காந்தத்தைப் பழம் புளிக்குள் வைத்து வெந்தெடுத்துக் கொண்டு சேர்த்துக் கொள்ளவும். வாளத்தை எருமைச் சாணத்தில் வெந்தெடுத்து தோடு முளைப் போக்கி பருப்பை பசுவின் மோரில் போட்டு ஒரு பொழுது ஊறப்போட்டு எடுத்து காயவைத்து முன் மருந்துடன் சேர்த்திடித்து வஸ்திரகாயம் பண்ணி வைத்துக்கொண்டு

**எலி விஷத்துக்கு:**

இலுப்பைப் பிண்ணாக்கு, எருமைத் தண்ணீர்விட்டு அரைத்து எலுமிச்சங்காய் பிரமாணம் எருமைத் தயிர் வடிகட்டி ஷ மருந்தைக் குழப்பி சாப்பிட்டு, குளிர்ந்தநீரில் முழுகவும். 7 நாள் 7 பொழுது தயிர் விட்டு சாப்பிடவும். பத்தியமில்லை.

**இரச சூலை முறிக்க:**

சுரகுடுக்கைக் கரியை நுனிக்கி பசுவின் பழமோரில் போட்டு சாப்பிடத் தீரும்.

**வாய்வுக்கு மருந்து:**

வடக்கே போகிற முருங்கை வேர், வேப்பங் கொழுந்து இரண்டும் அரைத்து கழற்சியளவு 3 உருண்டையை திருநீரில் விளக்கிச் சாப்பிடத் தீரும். பத்தியம் புளி ஆகாது.

சுக்கை இடித்துப் பொடி பண்ணி வெள்ளக் கோழிக் காரத்தையும் பொடி பண்ணி கருப்புக் கட்டியிலிறக்கி 8 பொழுது சாப்பிடத் தீரும். பத்தியமில்லை.

**ஒரு தலை மண்டையிடிக்கு:**

வேலிப்பருத்தியைக் கொண்டு வந்து கசக்கிச் சாறு பிழிந்து தலையிலே தேய்க்கத் தீரும்.

**விஷபேதி. வயிற்றுவலி முதலியவைகளுக்கு வாத ராட்சதச் சூரணம்:**

| | |
|---|---|
| ரசம் | கருஞ்சீரகம் |
| கெந்தகம் | கண்டத்திப்பிலி |
| சுக்கு | சிற்றரத்தை |
| மிளகு | ஓமம் |
| திப்பிலி | வெண்காரம் |
| சீரகம் | ஓமம் இவை சமன் |

கூட்டி ஆறப்பொடி பண்ணி அனுபான விசேஷத்தில் சகல ரோகங்களுக்கும் கொடுக்கவும். பொடி பண்ணுகிறது மெல்லியதாய்ப் பண்ணி வடி கட்டி எடுத்து வைத்துக் கொள்ள வேண்டியது. தருணங்கள் விஷபேதி, அங்கத்தியம், சுருவாங்க வலி, வயிற்று வலி, சளி, கபசுரமிவகைளுக்கு அனுபானத்துடனே கொடுக்க குணமாகும்.

**சகலமான புண்கிரந்தி மேகசூலைக்கு சீனபாகுச்சூரணம்:**

| | |
|---|---|
| திரிபலை | விளங்கம் |
| திரிகடுகு | காந்தம் |
| வெட்பாலை | வால்மிளகு |
| கொத்தமல்லி | சாதிலிங்கம் |
| வெண்காரம் | ஓமம் |
| துருசு | துத்தம் |
| சாதிக்காய் | சாதிப்பத்திரி |
| கிராம்பு | நவட்சாரம் |
| எவட்சாரம் | கொடிவேலிவேர் |
| சீரகம் இரண்டு | கடுகு |
| குரோசாணி ஓமம் | அபினி |
| கஸ்தூரிமஞ்சள் | கொடிவேலிவேர் |
| கடுகு | கல்மதம் |
| கல்நார் | வாலுழுவை அரிசி |
| வெட்பாலை அரிசி | கார்போகவரிசி |
| மூங்கிலரிசி | |

வகைக்குப் பலம் ¼, பரங்கிப்பட்டை பலம் 4, கெந்தகம் பலம் 2, குக்குலசேர் 1, சுத்தி பண்ணி இடித்து வடித்துக் கொண்டு தேனில் கொள்ள சகலமான புண், கிரந்தி, சூலைமேகம், மேகசூலை, வாய்வுக்கடி, வகைகள் சகலநோயும் குணமாகும்.

**மகாதாளிசைச் சூரணம்:**

| | | | |
|---|---|---|---|
| தாளிசபத்திரி | | | |
| மிளகு | | இலவங்கப்பட்டை | |
| சிறுநாகப்பூ | 2 பலம் | தகரம் | 2 பலம் |
| சுக்கு | 2 பலம் | கொத்தமல்லி | 2 பலம் |
| வாய்விளங்கம் | 2 பலம் | பூலான்கிழங்கு | 2 பலம் |

| | | | |
|---|---|---|---|
| திப்பிலி | 2 பலம் | கடுக்காய் | 2 பலம் |
| செவியம் | 2 பலம் | தான்றிக்காய் | 2 பலம் |
| அரத்தை | 2 பலம் | நெல்லிமுள்ளி | 2 பலம் |
| கிரந்தி | 2 பலம் | கொடிவேலி | 2 பலம் |
| கிராம்பு | 2 பலம் | இலாமிபிச்சன்வேர் | 2பலம் |
| தக்கோலம் | 2 பலம் | சடாமாஞ்சி | 2 பலம் |
| நல்லசந்தனம் | 2 பலம் | அகில்கட்டை | 2 பலம் |

இதுகளுக்குச் சமன் சர்க்கரைக் கூட்டி, சூரணமும், சர்க்கரையும் கலந்து கொண்டு பூரணசந்திரவேதையம் எவ்வளவாகிலும் கலந்துகொண்டு வெருகடிப் பிரமாணமிரண்டு நேரமும் கொள்ளத் தீரும்.

**தீரும் வியாதி:**

வாத பித்த சிலேட்டுமம், பாண்டு, சோகை, அதிசாரம், சுவாசகாசம், சுரகீதம், சிரோப்பிரேமை, மரணவேதனம், ஆறமானம், அக்கினிமாந்தியம், அன்னதேகம், அரோசிகம், உத்காரம், வகைசூலம், அசீரணம், குதிகாசம், விக்கல், வெறுவயம், சருவாங்க வாய்வு, நானாவித சுரம், பழஞ்சுரம், உடம்பு, ஈளை, சதுவன்னம், தாதுநாசத்துவம், அசுரகாரதி விரணம், உதிர்தேகம், மூர்ச்சை, ருசு சூனியம், திப்பிரமை நாக குலமுகம், இளைச்சது பாசம், கண்ட தோஷம், வேதனம் முழங்கால் நோவு, விலாப்புறத்து நோவு இதெல்லாந் தீரும்.

**அக்கினிமாந்தியத்துக்கு அஷ்டாதிச் சூரணம்:**

சுக்கு
திப்பிலி
மிளகு

சீரகம்
கருஞ்சீரகம்
இந்துப்பு
ஓமம்
பெருங்காயம்

வகைக்கு சமன் கூட்டி பெருங்காயம் ஒரு சரக்குக்கு நாலத்தொன்று கூட்டிச் சூரணம் பண்ணி சரக்கை கலந்து கொடுக்கவும். அக்கினி மாந்தியம், சருவாங்க வாதமும் போகும்.

**சுகவிரோசனத்துக்கு அயிபத்திச் சூரணம்:**

| | | |
|---|---|---|
| நெல்விமுள்ளி | 1 வராகன் | |
| இலவங்கப்பட்டை | 1 வராகன் | |
| கோரைக்கிழங்கு | 1 | ,, |
| இலவங்கப்பத்திரி | 1 | ,, |
| வாய்விளங்கம் | 1 | ,, |
| ஏலம் | 1 | ,, |
| கடுக்காய் | 1 | ,, |
| சுக்கு | 1 | ,, |
| மிளகு | 1 | ,, |
| திப்பிலி | 1 | ,, |

சிவதைவேர் சுத்திப்பண்ணி இவை வராகன் (30), சர்க்கரை வராகன் 40, ஆக வராகன் 81 சூரணம் பண்ணி கலந்து கொண்டு மூன்று வராகனிடை வெந்நீரில் கொள்ளவும். 6தரம் பேதியாகும். சுக விரோசனம்

**மேகத்துக்குச் சூரணம்:**

பூலான்கிழங்கு
கீழ்காய்நெல்லி

ஓரிலைத்தாமரை
கோரைக்கிழங்கு

சமன் கூட்டியதற்குச் சர்க்கரையை மண்டலம் கொள்ளச் சகல மேகமுந் தீரும்.

**வேறு:**

கொட்டைக்கரந்தை
செருப்படி
வெள்ளறுகு

மூன்று சூரணம் பண்ணி இதற்குப் பாதி சர்க்கரை சேர்த்துத் தின்ன இருபது நாளையிற் சகல மேகமுந் தீரும்.

**பல்லுக்குப் பொடி:**

| | |
|---|---|
| சேங்கொட்டை | 30 |
| களிப்பாக்கு பலம் | 1 |
| கொட்டைப்பாக்கு | 30 |
| துரிசி பலம் | 1 |
| உப்பு படி | ¾ |
| இலுப்பையில் தூக்கு | 1 |
| உப்புப் போட்ட பழமாங்கொட்டை | 30 |
| எருக்கம் பழுப்பு வேர் | 1 |

இதுகளெல்லாங் கருக்கித் துரிசி, காசிக்கட்டி பொடி பண்ணிக் கூட்டிப்போட்டு எல்லாமினமாய்க் கைமுறையாய்ப் பொடியாக்கிப் பல்விளக்கிக் கொண்டு வரப் பல்வலி சகலமுந் தீரும்.

**பல்லுக்குப் பொடி:**

| | | |
|---|---|---|
| கருவேலப்பட்டை | சேர் | 10 |
| கிளுவைப்பட்டை | சேர் | 10 |
| தண்ணீர் | சேர் | 16 |

பானையிலரெண்டு பட்டையுமிடித்துப் போட்டு தண்ணீர் விட்டுக் காய்ச்சி நாலு சேராக வடித்துக்கொண்டு சேங்கொட்டை சேர் 1, அரைப்பொடி பலம் 2, எருக்கம் பால் சேர் எலுமிச்சம் 1 அலகு, பாக்குக் காசுக்கட்டி துத்தம். துரிசு, கடுக்காய் வகைக்கு விராகன் 6 சாதிக்காய் விராகன் 1, பச்சைக்கற்பூரம் விராகன் 1, இந்த சரக்குகளெல்லாம் வெவ்வேறாகப் பொடிபண்ணி பொடியெல்லாம் ஒரு மிக்க சேர்த்துவைத்துக்கொண்டு எலுமிச்சம் பழச்சாறு,அரைத்துப் பொடியைக் கிளறி காயவைத்து தூள் பண்ணி முன் கடைச் சரக்கு பொடியோடக் கலந்து வைத்துக்கொண்டு கொட்டாங்கச்சியிலும், சேங்கொட்டையிலும், பிரத்யேகமாய் தைலமிறக்கி இந்த இரண்டு தைலமும் முன் கஷாயத்தோடே, கையாந்த கரைச்சாற்றை சேர்த்தடுப்பில் வைத்து பெருதீயால் எரித்து முன்மருந்து பொடி எல்லாம் போட்டுக் கிளறி இறக்கி காயவைத்துச் செசாரண்டி பொடி பண்ணி, கையில் வைத்துக்கொண்டு தினந்தோறும் காலமே பல்விளக்க பல்லவி சகலமுந் தீரும். எகிரு வளரும்.

**பல்வலிக்கு (வேறு):**

மருக்காரை சுக்கு, மருதத்தோல், வெள்வேல், எருக்காவரை பிரா ஏழும், நாளொன்றாய்க் காய்ச்சி நான்கு நாட்கள் கொப்பளிக்க “பாலன் பல் எல்லாம் கிழவன் பல்”

**மார்பு வலி, வயிற்று வலி, மேகத்துக்கு குக்குலு ரசாயணம்:**

குக்குலு பலம் 3

சுத்திப்பண்ணுகிற வேப்பன் பட்டை, கண்டங்கத்திரி, சீந்தித் தண்டு இவைகளில் சுத்திப் பண்ணிக்கொண்டு

| | |
|---|---|
| கொத்தமல்லி | 2 விராகன் |
| ஏலம் | 2 ,, |
| சாதிக்காய் | 2 ,, |
| இலவங்கம் | 2 ,, |
| அசமதாகம் | 2 ,, |
| வாலுழுவை | 2 ,, |
| அதிமதுரம் | 2 ,, |
| அரத்தை | 2 ,, |
| சித்திரத்தை மூலம் | 2 ,, |
| சுக்கு | 2 ,, |
| மிளகு | 2 ,, |
| திப்பிலி | 2 ,, |
| சர்க்கரை | 5 பலம் |
| தேன் | 5 பலம் |
| பசுவின் நெய் பலம் | 2¾ |

கடைச் சரக்கெல்லாமிடித்து வஸ்திரகாயம் பண்ணிக்கொண்டு தேன், சர்க்கரை, நெய் இவை விட்டு பண்ணிக் கொள்ளவும்.

**தீரும் வியாதி:** மார்புவலி, வயிற்றுவலி, சுரம், குன்மம், அதிசாரம் தீரும். தாது விருத்தி உண்டாம். சரீரபுஷ்டி உண்டாம். கார்ப்பு, புளிப்புத் தவிர்க்கவும்.

வேறு: மேகமும் போகும்.

**பஞ்ச காச நிருத்துரோகத்துக்கு பிப்பிலாதி ரசாயனம்:**

| | |
|---|---|
| திப்பிலி | 16 பலம் |
| சர்க்கரை | 8 பலம் |
| வாய்விளங்கம் | 4 பலம் |
| கண்டுபரங்கி | 4 பலம் |
| மிளகு | 4 பலம் |

| | |
|---|---|
| சீரகம் | 4 பலம் |
| திப்பிலிமூலம் | 4 பலம் |
| செவியம் | 2 பலம் |
| கொடிவேலி | 4 பலம் |
| சுக்கு | 2 பலம் |
| லோக செந்தூரம் | 2 பலம் |
| கரிசாலங்கண்ணி சூரணம் | 2 பலம் |
| இலவங்கப்பட்டை | 1 பலம் |
| இலவங்கப்பத்திரி | 1 பலம் |
| ஏலம் | 1 பலம் |
| கடுக்காய் | 1 பலம் |
| தான்றிக்காய் | 1 பலம் |
| நெல்லிக்காய்முள்ளியம் | 1 பலம் |
| சாதிக்காய் | பலம் |
| தேன் படி | 2 |

**தீரும் வியாதி:** பஞ்சகாசம், மிருத்து ரோகம் , பாண்டுவச்சுரம், வாய்வுச்சுரம், வாய்வு.

அக்கினி மாந்தம் இவைகளெல்லாம் குணமாகும். கைகண்டது.

இரத்த பித்தம், ஆம்பல் பித்தத்துக்கு கற்சூராதி ரசாயணம்

| | |
|---|---|
| பேரீச்சன்பழம் | 32 பலம் |
| சர்க்கரை | 32 பலம் |
| சுக்கு | 2 பலம் |
| திப்பிலி | 2 பலம் |
| மிளகு | 2 பலம் |
| இலவங்கப்பட்டை | 2 பலம் |
| இலவங்கப்பத்திரி | 2 பலம் |
| ஏலம் | 2 பலம் |

| | |
|---|---|
| சடாமாஞ்சி | 2 பலம் |
| சிற்றாமுட்டிவேர் | 2 பலம் |
| பேராமுட்டிவேர் | 2 பலம் |
| நாகமல்லி வேர் | 2 பலம் |
| சதகுப்பை | 2 பலம் |
| பூலாங்கிழங்கு | 2 பலம் |
| நல்ல சந்தனம் | 2 பலம் |
| நன்னாரி வேர் | 2 பலம் |
| காட்டெருமைப்பால் | 2 பலம் |
| தக்கோலம் | 2 பலம் |
| ரோணுகம் என்னும் | |
| இலந்தைக் கொட்டை | 2 பலம் |
| குடசப்பாலை விதை | 2 பலம் |
| கிராம்பு | 2 பலம் |
| கருஞ்சீரகம் | 2 பலம் |
| நற்சீரகம் | 2 பலம் |
| வெட்டிவேர் | 2 பலம் |
| விலாமிபிச்சன்வேர் | 2 பலம் |
| கோஷ்டம் | 2 பலம் |
| விளாம்பழம் | 2 பலம் |
| முந்திரிச்சம்பழம் | 2 பலம் |
| குங்குமப்பூ | 2 பலம் |
| பருத்திக்கொட்டை பருப்பு | 2 பலம் |
| சாதிக்காய் | 2 பலம் |
| சாதிப்பத்திரி | 2 பலம் |
| பசுவின் நெய் படி | 1 |
| பசுவின் பால் படி | 2 |
| தேன் படி | 1 |

ரசாயனம் பண்ணிக்கொண்டு ராசமிருகாங்கம் பொழுதைக்கு அரைப்பணவிடை கூட்டிக்கொண்டு நெல்லிக்காய்ப் பிரமாணம் இரண்டு நேரமும் உண்டு வரவும்.

**தீரும் வியாதி:**

ரத்த பித்தம், அம்லபித்தம், சிரோபிரமணம், அனல் பைத்தியம், மூர்ச்சை உத்காரம், மனப்பயித்தியம், பீடகம் தொடக பயித்தியம், தாருகம் முதலிய 21 பயித்தியமும், நானாவித சுரமும், சயமும், உளமாந்தை, அக்கினி மாந்தம், அசீரணம், அரோசிதம், தாகம் கண்ட கோழனம் இதுவெல்லாம் குணமாகும்.

மேக உஷ்ணம், அரோசிகம், தாது விருத்திக்கும் மத சமேத ரசாயினம்.

| | |
|---|---|
| பரங்கிப்பட்டை பலம் | 10 |
| திரிகடுகு | ¾ வராகன் |
| திரிபலை | ¾ வராகன் |
| ஏலம் | ¾ வராகன் |
| கிராம்பு | ¾ வராகன் |
| சாதிக்காய் | ¾ வராகன் |
| சாதிப்பத்திரி | ¾ வராகன் |
| சன்னலவங்கப்பட்டை | ¾ வராகன் |
| குராசாணி | ¾ வராகன் |
| ஓமம் | ¾ வராகன் |
| வாய்விளங்கம் | ¾ வராகன் |
| சிற்றரத்தை | ¾ வராகன் |
| சிறுதேக்கு | ¾ வராகன் |
| செவியம் | ¾ வராகன் |
| திப்பிலி மூலம் | ¾ வராகன் |
| கொத்தமல்லி | ¾ வராகன் |
| சீரகம் | ¾ வராகன் |
| சடாமாஞ்சி | ¾ வராகன் |
| விலாம்பிசின் வேர் | ¾ வராகன் |
| அமுக்கிரா வேர் | ¾ வராகன் |
| சிறுநாகப்பூ | ¾ வராகன் |

| | |
|---|---|
| வெட்பாலை | ¾ வராகன் |
| அரிசிவாலுளவை | ¾ வராகன் |
| ரேணுகம் | ¾ வராகன் |
| கசகசா | ¾ வராகன் |
| நீர்முள்ளி விதை | ¾ வராகன் |
| நெருஞ்சிக்காய் | ¾ பலம் |
| தண்ணீர்மிட்டான் | 1 பலம் |
| நிலப்பனைக்கிழங்கு | 1 பலம் |
| முருங்கைப்பூ | 1 பலம் |
| தூதுவளை | 1 பலம் |
| முந்திரிச்சன் பழம் | ¾ |
| பேரீச்சன்பழம் | ¾ |
| சீந்திச் சர்க்கரை | ¾ பலம் |
| கற்கண்டு | 5 பலம் |
| தேன்படி | ¼ |
| நெய்படி | ¼ |

இவைகளைச் சேர்த்து ரசாயனம் பண்ணிக் கொள்ள சகலமாக மேக உஷ்ணங்கள் தீர்ந்து, தாது விருத்தியுண்டாகும். அரோசிகந் தீரும்.

**அசுவகந்தி ரசாயணம்:**

| | |
|---|---|
| அமுக்கிராக்கிழங்கு | 26 பலம் |
| ஏலம் | 3 வராகன் |
| இலவங்கப்பட்டை | 3 வராகன் |
| இலவங்கப்பத்திரி | 3 வராகன் |
| சிறுகைப்பூ | 3 வராகன் |
| கொத்தமல்லி | 3 வராகன் |
| முந்திரிச்சன்பழம் | 3 வராகன் |
| சந்தனம் | 3 வராகன் |
| சன்னலவங்கப்பட்டை | 3 வராகன் |
| கற்கடகசிங்கி | 3 வராகன் |

| | |
|---|---|
| காட்டெருமை பால் | 3 வராகன் |
| சுக்கு | 3 வராகன் |
| மிளகு | 3 வராகன் |
| திப்பிலி | 3 வராகன் |
| வெட்டிவேர் | 3 வராகன் |
| கிராம்பு | 3 வராகன் |
| திப்பிலி | 3 வராகன் |
| வெட்டிவேர் | 3 வராகன் |
| மூலம் | 3 வராகன் |
| சித்திரைமூலம் | 3 வராகன் |
| செவ்வியம் | 3 வராகன் |

இதுவெல்லாம் சூரணம் பண்ணிக்கொண்டு பசுவின் பால் படி 4, சட்டியில் விட்டு, சர்க்கரை பலம் 50 போட்டு பாகுப்பண்ணி ரசாயனம்பண்ணிக் கொள்ளவும். உஷ்ணம், மேகசுரம், இரத்த பயித்தியம், பித்த ரோகம், சம சத்தமும், அசதி சுரமுந் தீரும். குணமாகும்.

**பதினெட்டுக் குட்டத்துக்கு கெந்தக ரசாயனம்:**

| | |
|---|---|
| கெந்தகம் | 1 பலம் |
| சுக்கு | 1 பலம் |
| மிளகு | 1 பலம் |
| திப்பிலி | 1 பலம் |
| கடுக்காய் | 1 பலம் |
| தான்றிக்காய் | 1 பலம் |
| நெல்லிமுள்ளி | 1 பலம் |
| இலவங்கப்பட்டை | 1 பலம் |
| இலவங்கப்பத்திரி | 1 பலம் |
| ஏலம் | 1 பலம் |
| சணப்பன் விதை | 1 பலம் |
| சேங்கொட்டை | 1 பலம் |
| வாய்விளங்கம் | 1 பலம் |

இது வகைக்கு பலம் 1 சூரணம் பண்ணி தேனிலுண்டைப் பண்ணிக் கொள்ளவும். வெண்ணெயில் குழப்பி வியாதிக்குத் தக்கதாய் கொடுக்கவும்.

**சேஷ்டும முதலானதுக்கு அரத்தை முதலான லேகியம்:**

| | |
|---|---|
| பேரரத்தை | 25 பலம் |
| சித்தரத்தை | 25 பலம் |
| கொடுவேலி | 50 பலம் |
| செவியம் | 32 பலம் |
| மிளகு | 16 பலம் |
| திப்பிலி | 16 பலம் |
| கண்டுபாரங்கி | 16 பலம் |
| சிற்றாமுட்டி | 16 பலம் |
| பேராமுட்டி | 16 பலம் |
| இலவங்கப்பட்டை | 16 பலம் |
| ஆயில்பட்டை | 16 பலம் |
| செம்முள்ளி | 16 பலம் |
| ஆடாதொடைவேர் | 16 பலம் |
| நெருஞ்சில்வேர் | 16 பலம் |
| வெள்ளை சங்கங்குப்பி | 16 பலம் |
| கறுத்த சங்கங்குப்பி | 16 பலம் |
| பிரண்டை வேர் | 16 பலம் |
| சிறுகாஞ்சொறி வேர் | 16 பலம் |
| நீளவேர் | 16 பலம் |
| முக்காவேளை | 16 பலம் |
| காட்டரணை வேர் | 16 பலம் |
| நாரத்தம் | 16 பலம் |

இடித்துப் பானையில் 8 மரக்கால் தண்ணீர் விட்டு குறுணியாகக் காய்ச்சி வடித்துக்கொண்டு பழவெல்லம் பலம் 80 போட்டுக் கரைத்து அடுப்பில் வைத்துப் பாகு பதமாய் வரும்பொழுது, போடுகிற கற்கத்திரவியம், சுக்கு, மிளகு,

திப்பிலி, ஆனைத்திப்பிலி, திப்பிலிமூலம், அதிவிடையம், செறுதேக்கு, வாய்விளங்கம், இலவங்கம், கற்கடக சிங்கி, விருகன் கிழங்கு, பூலான் கிழங்கு, சிறுநாகப்பூ, தக்கோலம், கொத்தமல்லி, ரேணுகம், லோக செந்தூரம், ரசசெந்தூரம், வகைக்கு பலம் 5, இதுவெல்லாமிடித்து சீலை வடிகொண்டு தேன் இரண்டு படி வார்த்துச் சூரணம் போட்டு வெண்காரம் பலம் 4, பொரிச்சுப் போட்டு பதமாய் இறக்கிக் கொள்ளவும்.

**தீரும் வியாதி:**

சேஷ்டுமம், இருபது பஞ்சகாசம், சுவாசகாசம், மந்தாக்கினி, மலபந்தம், அன்னத்துவேஷம், அரோசி வாந்தி, மார் நோவு, விக்கல், தலைவலி, பீனிசம், வாய்வு முதலான வியாதி எல்லாம் தீரும்.

**வாய்வுக்குச் சயத்துக்கு திப்பிலாதி லேகியம்:**

| | |
|---|---|
| திப்பிலி | 8 பலம் |
| மிளகு | 2 பலம் |
| சுக்கு | 2 பலம் |
| வாய்விளங்கம் | 2 பலம் |
| அமுக்கிராவேர் | 2 பலம் |
| கொடிவேர் | 1 பலம் |
| செவிய லோகம் | 1 பலம் |
| அரத்தை | 1 பலம் |
| கையாந்தகரை | 1 பலம் |

இடித்தரித்து சர்க்கரை அஞ்சு பலம் நாழி தேன் சேர்த்து இதனைக் கலந்து அருந்த தீரும்.

**தீரும் வியாதி:**

வாய்வு, சயம், சுவாச காசம்.

**இருமலுக்கு லேகியம்:**

வெண்காரம்
திப்பிலி
புழுங்கல் அரிசி
மிளகு
கிராம்பு

புழுங்கலரிசி வறுத்துக்கொள்கிறது. எல்லாம் சமன் எடை நெய்யில் லேகியம் பண்ணிக்கொள்ளவும். சகல இருமலுந் தீரும்.

புழுங்கலரிசி நெய்யில் வறுக்கிறது

வேறு:

| | |
|---|---|
| சுக்கு | 1 விராகன் |
| திப்பிலி | 1 ,, |
| மிளகு | 1 ,, |
| சித்தரத்தை | 1 ,, |
| தேத்தான்கொட்டை | 4 ,, |
| சீனி சர்க்கரை | 8 ,, |
| ஆவின்பால் சேர் | 1 |
| ஆவின்நெய் சேர் | ¼ |

இவை லேகிய பதமாய்ப் பண்ணிக் கொள்ளுகிறது. சகல அத்தி சுரமுந் தீரும். இருமலும் தீரும். தேத்தான் வித்து ஊறப்போட்டு மேல் தேய்ச்சுப் போட்டரைத்து கொள்ளுகிறது.

**கண்டாமகலம் லேகியம்: (பைத்தியம், வாய்வுக்கு)**

| | |
|---|---|
| நெல்லிக்காய்ச் சாறு | 1 சேர் |
| பால் | 1 சேர் |

| | |
|---|---|
| தாளிசபத்திரி | 2 விராகன் |
| மிளகு | 2 விராகன் |
| சீரகம் | 2 விராகன் |
| கெந்தவடி உப்பு | 2 ,, |
| சித்திமூலம் | 2 ,, |
| சாதிக்காய் | 2 ,, |
| கிராம்பு | 2 ,, |
| சாதிப்பத்திரி | 2 ,, |
| மூங்கிலுப்பு | 2 ,, |
| கூகைநீறு | 2 ,, |
| திப்பிலிமூலம் | 2 ,, |
| செவியம் | 2 ,, |
| சுக்கு | 2 ,, |
| கொத்தமல்லி | 2 ,, |
| ஆனைத்திப்பிலி | 2 ,, |
| திப்பிலி | 2 ,, |
| முந்திரிச்சன்பழம் | 2 ,, |
| கண்டத்திப்பிலி | 2 ,, |
| விலாம்பிச்சன் வேர் | 2 ,, |
| சிவதைவேர் பலம் | 2 |
| சர்க்கரை சேர் | 2 |
| நெய் சேர் | ¼ |
| தேன் சேர் | ¾ |

லேகியம் பண்ணிக்கொள்ள சகலமான பயித்திய வாய்வுந் தீரும்.

**மேகத்துக்கு பரங்கிப்பட்டை லேகியம்:**

| | |
|---|---|
| பரங்கிப்பட்டை சேர் | 1 |
| சுக்கு | 3 பலம் |
| கடலறஞ்சிப்பட்டை | 2 பலம் |
| சீனிசர்க்கரை சேர் | 2 |

| | |
|---|---|
| தேன் சேர் | 2 |
| நெய் சேர் | ¾ |

சீரகம் நெய் குத்திக் கொள்ளுகிறது. சகல மேகமும் நிற்கும்.

**மேகத்துக்கும் சகல வியாதிக்கும் மதகமேக லேகியம்:**

| | |
|---|---|
| பரங்கிப்பட்டை | 3 சேர் |

**கஷாய வகை:**

| | |
|---|---|
| வெள்ளைச்சாரணை வேர் | பேராமுட்டி |
| குப்பைமேனி வேர் | நொச்சி |
| பசுமஞ்சள், இலைக்கள்ளி | எருக்கில் |
| முதியார் கூந்தல் | எருமையாட்டான் கொடி |
| கையாந்தகரை | பிரமியப்பூண்டு |
| தும்பை | சட்டிசாரணை இலை |
| சிறுகுறுஞ்சா | சித்திரமூலம் |
| தழுதாழை இஞ்சி | சட்டிச்சாரணைக் கிழங்கு |
| பொடுதல் | கோரைக்கிழங்கு |
| சித்தாமுட்டி | நிலப்பனைக் கிழங்கு |
| சீந்திற்கொடி | விருகன்கிழங்கு |
| அமுக்கிரா வேர் | வெள்ளருகு |
| சங்கன் வேர் | பிரப்பன்கிழங்கு |
| மாவிலங்கம் வேர் | வேப்பன்பட்டை |
| வில்வப்பத்திரிவேர் | தண்ணிமுட்டான் கிழங்கு |
| பற்பாடகன் | ஓரிலைத்தாமரை |

| | |
|---|---|
| நிலையாவாரை | ஆற்றுமுள்ளி |
| முருங்கைவேர் | பொய்த்தலை |
| செருப்படிவேர் | வெள்ளைக்காக் |
| | கரட்டான் (வேர்) |
| சிவதை வேர் | |

ஆகியவைகள் வகைக்கு தூக்கு 3 இதுகள் சாறு வகைக்கு படி 1 வேர் வகைக் கஷாயம் வைத்துக்கொள்ளுகிறது.

| | |
|---|---|
| எலுமிச்சம்பழம் | 120 |
| தேங்காய் | 20 |

பால் பிழிந்துக் கொள்ள வேண்டியது

| | |
|---|---|
| முலைப்பால் படி | 1 |
| பசுவின் பால் படி | 2 |
| கடுக்காய் | 10 பலம் |
| தான்றிக்காய் | 10 பலம் |
| நெல்லிமுள்ளி | 10 பலம் |
| சுக்கு | 7 பலம் |
| மிளகு | 7 பலம் |
| திப்பிலி | 4 பலம் |
| தாளிசபத்திரி | 4 பலம் |
| செவியம் | 4 பலம் |
| சிறுநாகப்பூ | 4 பலம் |
| வாய்விளங்கம் | 4 பலம் |
| ஓமம் | 4 பலம் |
| கருஞ்சீரகம் | 4 பலம் |
| சித்தரத்தை | 4 பலம் |
| திப்பிலிமூலம் | 4 பலம் |
| பேய்ப்புடல் | 4 பலம் |
| கற்கடக சிங்கி | 2 பலம் |
| தற்கோலம் | 2 பலம் |
| வால்மிளகு | 2 பலம் |

| | |
|---|---|
| மரமஞ்சள் | 2 பலம் |
| கஸ்தூரி மஞ்சள் | 2 ,, |
| கிராம்பு | 2 ,, |
| கொத்துமல்லி | 2 ,, |
| இந்துப்பு | 2 ,, |
| சடாமாஞ்சி | 2 ,, |
| ஏலம் | 2 ,, |
| சீரகம் | 2 ,, |
| சாதிப்பத்திரி | 1 பலம் |
| சாதிக்காய் | 1 ,, |
| கோரோசினை | 1 ,, |
| குங்குமப்பூ | 2 விராகன் |
| சர்க்கரை | 60 பலம் |
| நெய் | 45 பலம் |
| தேன் | 45 பலம் |

முன் சொன்ன கஷாயம் வகைகளில் இலைகள் அழைப்பித்து சாறுபிழிஞ்சுக் கொள்ள வேண்டியது. வேர்களை அழைப்பித்துக் கஷாயம் வைத்துக் கொள்ள வேண்டியது. இறுத்துக் கொண்டு பாகு பண்ணி லேகியம் பண்ணிக் கொள்ள வேண்டியது. பதமாய் செய்துக் கொள்ள வேண்டியது. பரங்கிப்பட்டையைக் கடைச் சரக்கோடே சேர்த்துக்கொள்ள வேண்டியது. இந்த அவிழ்தம் இரண்டு வேளையும் புன்னைக்காயளவு கொண்டால் தீரும் வியாதி மேகமும், 4448 வியாதியுந் தீரும். வைத்தியர்கள் தங்க கடையில் பேசிக்கொண்டு செய்து கொடுக்கவும்.

**இடுப்புவலி, வீரியவிருத்திக்கு லேகியம்:**

| | |
|---|---|
| புரசம்பிசின் | 1¾ விராகன் |
| சாதிக்காய் | ¾ ,, |
| சாதிப்பத்திரி | ¾ ,, |
| கிராம்பு | ¾ ,, |

| | |
|---|---|
| நிலக்கடம்பு | 1 விராகன் |
| பனவெல்லம் | 2¼ பலம் |
| நீர்முள்ளி விதை | 2 ,, |
| எள்ளு | 1 ,, |
| கடலைமாவு | 1 ,, |

இதுவெல்லாமொரு தேங்காய்க்குள்ளே, வெல்லம் நீங்கலாக அடைத்து வாயை மூடி சாணிபிடிப்பிச்சு, புடம் போடவும். தேங்காய் வெடிச்சு உடனே எடுத்துக்கொண்டு ஓடு தள்ளிப் போட்டு, வெல்லம் கூட்டி கிடிச்சு லேகியம் போலேயெடுத்துக் கொள்ளவும். சுண்டைக்காய்ப் பிரமாணம் இரண்டு வேளையுங் கொள்ள வேண்டியது. இடுப்பில் வலிப்போகும். வீரிய விருத்தியுண்டாகும். பந்தயம் போட்டுக் கொண்டு செய்து கொடுக்கவும். பத்தியமில்லை.

**தாது விருத்திக்கு மன்மத சிந்தாமணி லேகியம்:**

| | |
|---|---|
| சாம்பிராணி | 2 பலம் |
| சன்னலவங்கப்பட்டை | 2 பலம் |
| சிறுநாகப்பூ | 2 பலம் |
| கஞ்சா | ¾ சேர் |
| நெய் | ¾ சேர் |
| நிலையாவாரை | 1 பலம் |
| வெல்லம் | ¾ சேர் |

கஞ்சாவில் நெய்விட்டு வேகவைத்து நெய் இறக்கிக் கொண்டு லேகியமாய் இடித்துக் கொள்ளவும். சுண்டைக்காய் அளவு கொள்ளவும். விருத்தி உண்டாம்.

**வீரிய விருத்திக்கு லேகியம்:**

அதிமதுரம்
நெருஞ்சி விதை

பூனைக்காலி விதை
நிலப்பனைக் கிழங்கு
தண்ணிமிட்டான்
முள்ளி
இலவம் பிசின்
சர்க்கரை
தேன்

முதலியன சேர்த்து லேகியம் பண்ணிக் கொள்ளவும்.

அமுக்கிரா எள்ளு
உளுந்து
தண்ணீர்மிட்டான்
காட்டறனை
சர்க்கரை
தேன் லேகியம் பண்ணிக்கொள்ளவும்.

**தாது விருத்திக்கு மருந்து உருண்டை லேகியம்:**

| | |
|---|---|
| பேரீச்சங்காய் | முருங்கைவிதை |
| ஊமத்தன்விதை | குங்குமப்பூ |
| கொதும்பை | பச்சைக்கற்பூரம் |
| மாவு பாலு ரசம் | சாதிக்காய் |
| கெந்தகம் | பத்திரி ஏலம் |
| அபின் | கிராம்பு |
| கஞ்சா | கசகசா |
| பூனைக்காலி | நிலப்பனை |

பலகனை, இசுப்புக் கோல், மருங்கைப்பூ, நீர்முள்ளி விதை ஆனைத்திப்பிலி வகைக்கு பலம், இவைகளை கல்வத்தி மயனம் போலப் பசுவின் பால் விட்டரைத்து மரு இடைக்கற்கண்டு சேர்த்தரைத்து தூதுவளம் பழம் அ செய்து காயவைத்துக் கொள்ள விருத்தியாம்.

**தாது விருத்திக்கு மருந்து உருண்டை லேகியம்:**

| | |
|---|---|
| கஞ்சா அபின் | |
| சாதிக்காய் | |
| பத்திரி | 3 விராகன் |
| கிராம்பு | 3 ,, |
| நீர்முள்ளி விதை | 3 ,, |
| இசுபு கோல் | 3 ,, |
| பூனைக்காலி விதை | 3 ,, |
| நிலப்பனைக்கிழங்கு | 3 ,, |
| முருங்கை விதை | 3 ,, |
| சாதிலிங்கம் | 3 ,, |
| சிறுநாகப்பூ | 3 ,, |
| கருவாய்பட்டை | 3 ,, |
| வால்மிளகு | 3 ,, |

இவை எல்லாம் இடித்து பசுவின் பால் விட்டரைத்து முற்றின பெருந்தேங்காயில் அடைத்து ஓடு கருக புடம் போட்டெடுத்து சரக்கிடை கற்கண்டு சேர்த்து மெழுகு போலரைத்து சுண்டைக்காயளவு போலே உருட்டி சரீரமறிந்து கொடுக்க விருத்தியுண்டாம்.

**தாது விருத்திக்கு தேற்றான் லேகியம்:**

| | | |
|---|---|---|
| சீரகம் | படி | 1 |
| தேற்றான் விதை | பலம் | 4 |

சீரகத்தை சீலையில் முடிஞ்சு தேற்றான் விதையும் நறுக்கிப் போட்டு, நாலு மரக்கால் தண்ணீர் விட்டு நாலு நாளைக்கு ஒரு விரகாலே நாலு நாழி வீதம் எரித்து முக்கால் படி தண்ணீருக்குத் தக்கதாக இறக்கி வடிகட்டி வைத்துக்கொண்டு

| | |
|---|---|
| சன்ன லவங்கப்பட்டை | 3/4 பலம் |
| லவங்கப்பட்டை | 3/4 பலம் |
| சுக்கு | 3/4 ,, |
| மிளகு | 3/4 ,, |
| திப்பிலி | 3/4 ,, |
| கடுக்காய் | 3/4 ,, |
| தான்றிக்காய் | 3/4 ,, |
| நெல்லிமுள்ளி | 3/4 ,, |
| வெட்பாலை | 3/4 ,, |
| குரோசாணி ஓமம் | 3/4 ,, |
| சீரகம் | 3/4 ,, |
| கொத்தமல்லி | 3/4 ,, |
| சடாமாஞ்சில் | 3/4 ,, |
| அமுக்கிரா வேர் | 2 ,, |
| பரங்கிப்பட்டை | 4 ,, |
| கோஷ்டம் | 3/4 ,, |
| அதிமதுரம் | 3/4 ,, |
| சிறுதேக்கு | 1/4 ,, |
| செவியம் | 1/4 ,, |
| நன்னாரி வேர் | 1/4 ,, |
| விளாம்பிச்சம் வேர் | 1/4 ,, |

இது வகைகள் சூரணம் பண்ணி வடிகட்டி வைத்துக்கொண்டு,

| | |
|---|---|
| ஏலம் | 2 விராகன் |
| சாதிக்காய் | 3/4 ,, |
| சாதிப்பத்திரி | 3/4 ,, |
| கிராம்பு | 1 ,, |

இந்த நாலு வகையும் அலாதியாய் சூரணம் செய்து வைத்துக்கொண்டு, சர்க்கரை பலம் 16 அந்தக் கிஷாயத்தில்

கரைத்து வடிகட்டி மெழுகு பதமாய்க் காய்ச்சி மெழுகு பதமாய் கிண்டி, உடனே இந்த சூரணம் எல்லாம் போட்டுக் கிண்டுகிறது. அதற்கு மேல் பசுவின் நெய் தளர சேர் விடுகிறது. அதற்கு மேல் நாலு வகை சூரணமும் போடுகிறது. கிண்டி வைத்துக்கொண்டு வேளைக்கு விராகன் வீதம் இரண்டு வேளையுங் கொள்ளவும்.

**தீரும் வியாதிகள்:**

அரோசிகம், ஆரம்பசுகம் 21, மேகம், ஆரம்ப தாது விருத்தி, சகல வியாதிக்கும் அறமான லேகியம். கைகண்டது.

**எரிவு மயக்கம், பயித்தியத்துக்கு வில்வாதி லேகியம்:**

| | |
|---|---|
| வில்வவேர் | 30 பலம் |
| சிற்றாமுட்டி வேர் | 30 ,, |
| கருவேப்பிலைத்தண்டு | 10 ,, |
| முக்காவேளைவேர் | 10 ,, |

இடித்து எட்டு மரக்கால் தண்ணீர் வார்த்து குறுணியாகக் காய்ச்சிக்கொண்டு, பழவெல்லம் 30 பலம், அந்தக் கஷாயத்தில் போட்டுக் கரைத்து வடி கட்டிக் கொண்டு, காய்ச்சிப் பாகு கம்பிப்பதம் வரும்போது,

| | |
|---|---|
| சுக்கு | 1 பலம் |
| திப்பிலி | 2 ,, |
| திப்பிலிமூலம் | 2 ,, |
| சித்திரைமூலம் | 2 ,, |
| ஏலம் | 1 ,, |
| சீரகம் | 1 ,, |
| கிராம்பு | 1 ,, |

| | |
|---|---|
| இந்துப்பு | 1 பலம் |
| மிளகு | 1 ,, |
| இலவங்கப்பட்டை | 1 ,, |
| சிறுநாகப்பூ | 1 ,, |
| தாளிசப்பத்திரி | 1 ,, |
| தக்கோலம் | ¾ ,, |
| இலவங்கப்பத்திரி | ¾ ,, |

இதுவெல்லாம் பொன்னிறமாய் வறுத்து இடித்து வஸ்திரகாயம் பண்ணிக் கொண்டு பாகிர் போட்டு லேகியம் பண்ணி தென்னாழிவிட்டு கிளறி பதத்திலிறக்கிப் பாக்கத்தனை இருவேளை உட்கொள்ளத் தீரும்.

**தீரும் வியாதி:**

வானீர், கொளுத்தல், குலைஎரிவு, கைகால் எரிவு, மயக்கம், அக்கினி மாந்தம், அன்னதோஷம், வாந்தி இவைகள் குணமாகும்.

**பத்தியம்:**

பால், தயிர், மோர், நெய் கூட்டவும். கைப்பு, புளிப்புத் தவிரவும்.

**மேகத்திற்கும் பயித்தியத்துக்கும் கற்சூராதி லேகியம்:**

பேரீச்சன் பழம், முந்திரிச்சன் பழம், நெல்லிமுள்ளி, இலுப்பைப்பருப்பு, நல்ல சந்தனம், அதிமதுரம், நெருஞ்சிக்காய், பூமி சர்க்கரைக்கிழங்கு, பெரும் பூசணி விதை, தண்ணீர்மிட்டான் கிழங்கு, கொத்தமல்லி, இலவங்கம், நீர்முள்ளி விதை, இவை எல்லாம் சமபாகம் கூட்டிச் சூரணம் பண்ணி இதற்கு சமன் சர்க்கரை கூட்டிக் கொண்டு மூவிரல் கொண்டு வெறும் வயிற்றில் காலமே

கொண்டால் குணமாகும். அதின் குணம், மூத்திரக்கிரச்சியம், ஆகிரண பயத்தியம், சருவ மேகம், அங்க தேகம், சிரோத்தாகம், கண்ணெரிவு, கைகால் எரிவு, அரோசிகம் முதலான வியாதி எல்லாந் தீரும்.

இருமல், அக்கினி மாந்தத்துக்கும், பழஞ்சுரத்துக்கும் அசுவகெந்தாதி லேகியம்.

| | |
|---|---|
| அமுக்கிரா வேர் | 20 பலம் |
| சர்க்கரை | 10 ,, |
| பால் | நாழி |
| நெய் | ,, |

சுக்கு, மிளகு, திப்பிலி, இலவங்கப்பத்திரி, தாளிசப்பத்திரி, சிறுநாகப்பூ, கிராம்பு

| | |
|---|---|
| கிராம்பு | 1 பலம் |
| முந்திரிச்சம்பழம் | 1 ,, |
| பேரீச்சன் பழம் | 1 ,, |
| ஏலம் | 1 ,, |
| சீரகம் | 1 ,, |
| இலவங்கப்பட்டை | 1 ,, |
| கண்டத்திப்பிலி | 1 ,, |
| அரத்தை | 1 ,, |
| தூதுவளை வேர்ப்பட்டை | 1 ,, |
| கண்டங்கத்திரி | 1 ,, |

தூதுவளை நீங்கலாக மற்ற சரக்கெல்லாம்பொன்னிறமாய் வறுத்து இடித்து வஸ்திரகாயம் பண்ணிக்கொண்டு பாலில் சர்க்கரை கரைச்சுப் பாகாய்க்காய்ச்சி பதமாய் வரும்போது தூளை விட்டு கிளறி நெய் தேன் விட்டு வைத்துக்கொண்டு கொள்ளத்தீரும்.

**தீரும் வியாதி:** தீரும் இருமல், அக்கினி மாந்தந் தீரும்.

ஊரல் , கிரந்தி, பல்லாதி லேகியம், சகலமான மேக வாய்வுக்கு:

| | |
|---|---|
| சேங்கொட்டை | 5 பலம் |
| பச்சைக்கடலை | 5 ,, |
| பரங்கிப்பட்டை | 5 ,, |
| நெல்லிமுள்ளி | 3 ,, |
| பேரெள்ளு | 5 ,, |
| வெல்லம் | 15 ,, |

சுத்தி பண்ணின கெந்தகம் பலம் இது வெல்லம் லேகியம் போல் இடித்து லேகியத்தை பின்னைக் காயளவு உருண்டை பண்ணி சாப்பிடவும். கார்ப்பு, புளிப்புத் தவிரவும் தீரும்.

**தீரும் வியாதி:**

ஊறல், கிரந்தி, ஊறல் போகும்.

**மேகவாய்வு, சூலை, ஊறலுக்கு பல்லாதி லேகியம்:**

பழவெல்லம், சித்திரைமூலம், ஓமம், கொப்பரை, பதறு, சேங்கொட்டை, வெள்ளை எள்ளு, பூண்டு, கடுகு, ரோகணி, மிளகு, நீரடிமுத்து, இவைகள் சமன் கொண்டு லேகியம் பண்ணிக் கொள்ளவும். நாற்பது நாள் தின்னவும். கார்ப்பு புளிப்புத் தவிர்க்கவும்.

**தீரும் வியாதி:**

மேகவாய்வு, சூலைகள், ஊறல்கள் இவைகளெல்லாம் போகும்.

**சகலமான மேக வாய்வுக்கு பல்லாதி லேகியம்:**

| | |
|---|---|
| சேங்கொட்டை | 1 சேர் |
| ஒருதலைப்பூண்டு | 1 சேர் |
| ஓமம் உ | 1 சேர் |
| கருவேலன் பிசின் | 1 சேர் |
| கொப்பரை | 1 சேர் |
| பழவெல்லம் | 1¼சேர் |
| வெண்காரம் | 2 பலம் |
| தும்பை இலைச்சாறு | சேர் |

சேங்கொட்டை குமிழ் போக்கி கூட்டிக் கொள்ளவும். ஓமம் அரிசி தள்ளி கூட்டிக் கொள்ளவும். உள்ளியில் நரம்பு போக்கிக் கூட்டிக் கொள்ளவும். வெண்காரம், பொரித்துக் கொள்ளவும். கொப்பரைக்கு மேல் பரணி சீவிப் போடவும். பிறகு எல்லாங் கல்லுரலில் போட்டு லேகியமாக இடித்துக் கடைசியில் தும்பைச் சாறு விட்டு இடித்து லேகியமாய் எடுத்துக் கொள்ளவும்.

**தீரும் வியாதி:**

சகலமான மேக வாய்வு, சகலமான மேகம், சகலம ான கடி விஷம், கடிகளும் மண்டலங் கொள்ளத் தீரும். கார்ப்பு, புளிப்பைத் தவிரவும்.

**சகலவாதம் பிடிப்புக்கு ரசபல்லாதிகை லேகியம்:**

| | |
|---|---|
| சேங்கொட்டை | 2 பலம் |
| ஓமம் | 1 பலம் |
| சுக்கு | ¾ பலம் |
| கொத்தமல்லி | ¾ பலம் |
| இலவங்கப்பட்டை | ¾ பலம் |
| நீரடிமுத்து | 1 பலம் |

| | |
|---|---|
| வெல்லம் | 2 பலம் |
| ரசம் | 1 விராகன் |

இவைகள் கூட்டி பளிக்கரைச்சு அந்தத் தண்ணீர் விட்டு இடித்து லேகியமாய் எடுத்துக் கொள்ளவும். சகலவாதமும் சகல பிடிப்புந் தீரும்.

**மேக வாயு சூலைக்கு கட்டுக்கு பல்லாதிகை:**

| | |
|---|---|
| சேங்கொட்டை | 3 சேர் |
| பரங்கிப்பட்டை | 3 பலம் |
| சுங்கம் வேர் | 2 பலம் |
| பிரப்பன் கிழங்கு | 2 பலம் |
| காட்டுச்சீரகம் | 2 பலம் |
| கார்போகவரிசி | 2 பலம் |
| வெட்பாலை அரிசி | 2 பலம் |
| கருஞ்சீரகம் | 2 பலம் |
| வெள்ளறுகு | 2 பலம் |
| ஓமம் | 2 பலம் |
| கடுக்காய் | 2 பலம் |
| தான்றிக்காய் | 2 ,, |
| மிளகரணைப்பட்டை | 2 ,, |
| ஈசுரவேர் | 2 ,, |
| புடப்பத்திரி வேர் | 2 ,, |
| சித்திரை மூலம் | 2 ,, |
| கண்டத்திப்பிலி | 2 ,, |
| நீரடிமுத்து | 3 ,, |
| குக்குலு | 2 சேர் |
| எள்ளு | 2 பலம் |
| வெல்லம் | 6 சேர் |
| தேன், நெய் | 5 சேர் |

இடித்துக்கொண்டு மேகவாய்வு, சூலைக்கட்டுக் கிராணி, வயிற்று உப்பல், பொருமல், முழங்கால் பிடிப்பு, குதிவாதம், கணு பிடிப்புகள் சகலமான ரோகங்களுக்கும் கொடுக்கவும்.

| | |
|---|---|
| சேங்கொட்டை | 10 பலம் |
| கெந்தகம் | 2 பலம் |
| குக்குலு | 2 பலம் |
| பரங்கிப்பட்டை | 2 ,, |
| வாய்விளங்கம் | 2 ,, |
| நீரடிமுத்து | 2 ,, |
| சிவனார்வேம்பு | ¾ ,, |
| நிலையாவாரை | ¼ ,, |
| தேவதாரம் | ¼ ,, |
| ஆனைத்திப்பிலி | ¼ ,, |
| சீரகம் இரண்டும் | ¼ ,, |
| சிறுநாகப்பூ | ¼ ,, |
| சதகுப்பை | ¼ ,, |
| கடுகுரோகணி | ¼ ,, |
| குராசாணி | ¼ ,, |
| ஓமம் | ¼ ,, |
| கடுகு | ¼ ,, |
| வங்கபஸ்பம் | 2 ,, |
| நிலவேம்பு | ¾ ,, |
| வெள்ளறுகு | ¾ ,, |
| கிளாப்பட்டை | ¾ ,, |
| சங்கம் வேர் | ¾ ,, |

தேன், சர்க்கரை, நெய் கூட்டு பண்ணிக்கொள்ளவும். இந்த பல்லாதி, மேகம், மேக வாய்வுகள் பிடிப்புகள் முதலானது தீரும்.

பதினெட்டுக் குட்டம். கடிகளுக்கும், கிரந்திக்கும் பல்லாதிகை லேகியம் நுணாக்காய் கிரந்தி முகத்தில் காணுகிறதற்கும்.

| | |
|---|---|
| சேங்கொட்டை | ¾ பலம் |
| நீரடிமுத்து | ¾ பலம் |

| | |
|---|---|
| நாபி | 5 விராகன் |
| கருநாபி | ¾ ,, |
| எள்ளு | ¾ படி |
| கார்த்திகைக்கிழங்கு | 2 விராகன் |
| கஸ்தூரி மஞ்சள் | 1¾ பலம் |

பதினெட்டுக் குட்டமுந் தீரும். மேகத்துக்குக் கொடுக்க வேண்டாம். முகத்தில் காணுகிற நுணாக்காய்க் கிரந்தியும் குணமாகும்.

**வயிற்றுக் கடுப்புக்கு லேகியம்:**

| | |
|---|---|
| வரட்பூலாவேர் | ¼ படி |
| காரைவேர் | ¼ படி |
| மாதளை வேர் | ¼ படி |
| அருநெல்லிவேர் | ¼ படி |
| துத்தி வேர் | ¼ படி |
| வரட்சுண்டிவேர் | ¼ படி |
| மாம்பட்டை | ¼ படி |
| வாழைப்பூ | ¼ படி |
| கோரைக்கிழங்கு | ¼ படி |
| தென்னம்பாளை | ¼ படி |
| வருட்சிவேர் | ¼ படி |
| மாதுளைவேர் | ¼ படி |
| நாவல்பட்டை | ¼ படி |
| ஆவாரைவேர்ப்பட்டை | ¼ படி |
| இலந்தை வேர் | ¼ படி |
| எலுமிச்சம்பழச்சாறு | ¼ படி |
| கருவளங்காய்சாறு | ¼ படி |
| துறிஞ்சிச்சாறு | ¼ படி |
| மாதுளம்பழச்சாறு | ¼ படி |
| வில்ல இலைச்சாறு | ¼ படி |
| முசுமுசுக்கைச்சாறு | ¼ படி |
| கருப்பஞ்சாறு | ¼ படி |

கலக்கத்திரவியம் கற்கடகசிங்கி, இசுப்பு கோல், குறாசாணி ஓமம், அதிவிடையம், கடுக்காய்ப் பிஞ்சு, சிறுநாகப்பூ, சீரகமாம் பருப்பு, புளியங்கொட்டைத் தோல், சாதிக்காய், வால்வப்பிஞ்சு, மாதுளை ஓடு, கோரைக்கிழங்கு, ஆனைத்திப்பிலி, வெள்ளரி விதை, கல்கண்டு சேர் 1, நெய் சேர் 1.

இவை லேகியம் பண்ணிக் கொள்ளவும். சகலக் கடுப்புந் தீரும். இதில் முன் எழுதியிருக்கும் வேர் வகையும் பட்டை வகையும் கிஷாயம் வைத்து இறுத்துக்கொண்டு பச்சிலை வகைகளை இடித்துச் சாறு பிழிந்து முன் சொன்னபடி அளந்து விட்டுக் கொண்டு இதில் கல்கண்டு கரைத்து வடிகட்டி காய்ச்சிப் பாகுபதத்தில் லேகியம் கலக்கித் திரவியப் பொடி தூவிப் பண்ணிக் கொள்ளவும்.

**பாண்டு, சோகை, காமாலைக்கு அஷ்ட சிந்தாதி லேகியம்:**

| | |
|---|---|
| கடுக்காய் | 50 |
| தான்றிக்காய் | 50 |
| நெல்லிமுள்ளி | 25 |
| சுக்கு | 1 பலம் |
| மிளகு | 1 ,, |
| திப்பிலி | 1 ,, |
| சீரகம் | 1 ,, |
| கருஞ்சீரகம் | 1 ,, |
| ஓமம் | 1 ,, |
| பெருங்காயம் | 1 ,, |
| லோகம் | 4 ,, |
| பசுவின் கோமியம் | 2 படி |
| கற்றாழைச்சாறு | 1 படி |
| ஆடாதொடைச்சாறு | 1 |

இந்த மூன்று வகைச்சாறு விட்டு அரப்பொடியை நாலு சாமம் அரைத்துக் கொண்டு, கடைச் சரக்கெல்லாம் வசத்திற் காயம் பண்ணிக்கொண்டு முன் மிஞ்சியிருக்கும் சாந்தில் புட்டிக் கருப்பட்டி பலம் 4 போட்டுப் பாகாய்க் காய்ச்சிப் பதமாய்

வரும்பொழுது கொஞ்சம் தேன் விட்டு லேகியமாய் எடுத்துக் கொள்ளவும். இரண்டு வேளையும் குண்டிப் பிரமாணம் கொண்டால் தீரும்.

**தீரும் வியாதி:**

பாண்டு, சோகை, காமாலை, மகோதரம், நீராம் பெருவயிறு, குடல்வாதம், இருமல், சுவாசகாசம் அனேக பித்தரோகங்கள் தீரும்.

**பாண்டுவுக்கு சிந்தாதி லேகியம்:**

| | |
|---|---|
| புளியிலை | 100 பலம் |
| துருப்பிடிச்ச இரும்பு | 10 பலம் |
| கிழாயத்துக்கு தண்ணீர் மரக்கால் | 8 |
| வெல்லம் | 20 பலம் |
| சுக்கு | 2 ,, |
| மிளகு | 2 ,, |
| திப்பிலி | 2 ,, |
| கடுக்காய் | 2 ,, |
| தான்றிக்காய் | 2 ,, |
| இஞ்சி | 16 ,, |
| தேன் | 2 படி |
| நெய் | 1 படி |
| லோக சிந்தூரம் | 2 பலம் |

லேகியம் பண்ணிக்கொள்ளவும். பாண்டு முதல் அனேக ரோகமெல்லாம் தீரும்.